# தென்மொழி

## கதிரவ விடுதலே ஒளிவான் படருமோ?

உலகம் முழுதும்
தமிழர் முழக்கம்!
உறக்கம் தவிர்ந்தது!
உரிமை ஒலித்தது!

கலகம் அடங்கிக்
காரிருள் களேயுமோ?
கதிரவ விடுதலே
ஒளிவான் படருமோ?



# நமக்கு வந்த மடல்கள்.

0;979: பேரன்புடையீர், பணிவான வணக்கம். தாங்கள் 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களை நிறுத்தவும், 'தமிழ்நில'த்தை வளப்படுத்தவும் எடுத்துள்ள முடிவால், தென் மொழியில் வரும் ஏற்புரைகளையும், மறுப்புரைகளையும் தொடர்ந்து கவனித்ததின் விளைவாக, என்னுடைய கருத்தை நம்மவர்கள் முன் வைக்கின்றேன். சிந்திப்பார்களாக;

முதலில் 'தென்மொழி' எதற்காகத் தொடங்கப்பட்டது என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். பாவலரேறு அவர்கள் ஒரு மெய்யுணர்வாளராகவும், மாந்தநேயம் உடையராகவும் இருப்பதை அவருடைய பல பொதுநலப் பாடல் களிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். இவ்வுணர்வுகள் மேலோங்கியிருந்தும் ஒரு குறிப்பிட்ட இன மக்களுக்காக அஃதா வது தமிழின மக்களுக்காகவே அவர் இன்று எண்ணியும் எழுதியும் வருவது, அவருடைய மொழிசார்ந்த உறவுக்காகவும் அம்மொழி யைச் சார்ந்தோர் அடையும் அவலங்களைப் போக்குவதற்குமே யாகும், தமிழ் மொழியும், இனமும், நாடும் பிற இனத்திற்கு அடிமைப்பட்டிருப்பது அவர் மனத்தை வருத்தியிருக்கவேண்டும். அதிலும் மொழியைப்பற்றிய எண்ணமே முதலில் முகிழ்த்திருக்க வேண்டும். இனத்தையும் நிலத்தையும் மீட்பதற்கு முதலில் மொழி வழியாக மக்களை ஒன்றுபடுத்தவேண்டும், என்ற நோக்கத் துடன், மொழியை வடமொழிக் கலப்பினின்று மீட்பதற்கும் அவர் 'தென்மொழி'யை தொடங்கியிருக்கவேண்டும். மக்களை மொழி யிலிருந்துதான் படிநிலை வளர்ச்சியாக மேலேகொண்டு செல்லவும், அவர்களுடைய அடிமை நிலையை உணர்த்தி உரிமைக்காகப் போராடவைக்கவேண்டும் என்ற எண்ணத்திலும் 'தென்மொழி' தொடங்கப் பட்டிருக்கவேண்டும். இதை அவருடைய பழைய எழுச்சிமிக்க பாடல்களாலும், தெளிவும் உரனுமிக்க ஆசிரிய உரைகளாலும் நாம் அறிந்து கொள்ளலாம். அல்லது வேறு எந்தக் கரணியத்திற்காகத் 'தென்மொழி' தொடங்கப் பட்டிருந்தாலும், இன்றுவரை இவற்றை (மொழி, இனம், நாடு) நடுவமாக வைத்தே அவருடைய எண்ணமும் செயலும் இயங்கிக் கொண்டுள்ளன.

தென்மொழியும் தமிழ்ச்சிட்டும் தனிப்பட்ட சிலருடைய மொழி அறிவையும் இலக்கிய அறிவையும் மனநிலை ஒழுங்கையும் வளர்த்திருக்கலாம்; உண்மையும் அதுதான்; ஏனெனில், மிகவும் சிறிய ஒதுக்குப்புறமான சிற்றூரில் பிறந்து, தன் ஊரே உலகமாக வும் தான் பிறந்த சாதியே உறவினராகவும், அறியாமையையும் வறுமையையுமே தங்களின் பரம்பரைச்சொத்துகளாகவும்கொண்டு வாழும் மக்களிடைய உலவிய-என் போன்றோர்க்கு, தமிழினத்தின் உண்மையான பண்பாடுமிக்க, பீடு நிறைந்த வரலாற்றைத் தெளி வாகக் காட்டியது 'தென் மொழி' ஒன்றே. இது போன்ற தனிப் பட்ட ஒரு சிலர் அடைந்த நன்மைக்காக இன்று நாமோ அல்லது பாவலரேறு அவர்களோ மன நிறைவு கொள்ளமுடியுமா? நம்மைச் சார்ந்தோரும் நம்நிலைக்கு உயர்ந்தால் அல்லவோ நாமும் அமைதி பெறமுடியும்.

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]

# தென்மொழி

மொழி—இனம்—நாடு

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

---

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்
புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன் தென்மொழி
ந. முத்துக்குமரனார், தென்மொழி, ப. துரையரசன்.
தென்மொழி நா. இளமாறன்.

சுவடி: 20] உ௦கச நளி-சிலை நவம் திச 83' [ஓலை .1-2

## ஐரோப்பியச் செலவில் ஒட்டு உண்ணி(!)யாய் வந்திணைந்த ஓர் அழுக்காறு!

(முன் குறிப்பு: இப்படி ஒரு கட்டுரையை எழுதுவதற்கு அன்பர்கள் அருள்கனிந்து என்னைப் பொறுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். பொதுவாழ்வில் எப்படிப் பலவற்றைப் பொருட்படுத்தத் தேவையில்லையோ, அப்படியே சிலவற்றைப் பொருட்படுத்தியே ஆகவேண்டியுள்ளது. தீமை அளவுக்கு மீறி எதிர் வரும்போது அதுபற்றி நாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது மட்டுமன்றிப் பிறரையும் எச்சரிக்கைப் படுத்த வேண்டியுள்ளது. அப்படிப் பட்ட ஒரு சூழ்நிலையில் இதை எழுத வேண்டியுள்ளது. அன்பர்கள் மிகவும் கட்டாயமாகவும், கவனத்துடனும் இதைப் படிக்க வேண்டிக் கொள்கின்றேன்.)

பலநிலைகளில் மிகவும் எச்சரிக்கையாய்ச் செயல்படும் நான், சில நிலைகளில் அளவிறந்த நம்பிக்கையால் மிகவும் ஏமாறி

விடுகின்றேன். தமிழ், தமிழினம் இவற்றின் மேல் எவராவது பற்றுக் காட்டிப் பேசுவாராளுல், எடுத்த எடுப்பிலேயே அவர்கள் மேல் பெருத்த நம்பிக்கை கொண்டு விடுவது என் இயல்பாகப் போய்விட்டது. அந்நிலை கடந்த காலங் களில் பல தொல்லைகளையும், துன்பங்களையும், இழிவுகளையும் ஏமாற்றங்களையும், இடர்ப்பாடுகளையும், இக்கட்டுகளையும், பழி களையும் பயனில்லா முயற்சிகளையும், வீண் செலவுகளையும், வேண்டாத சுமைகளையும் எனக்கு உண்டாக்கியிருக்கின்றன. இத்தகைய பட்டறிவின் அடிப்படையில் ஏற்பட்ட அதிர்ச்சி யாலும் அச்சத்தாலும், நல்லவர் சிலரையும் கூட, தேவையான பொழுதுகளில் நம்பவியலாமல், அந்த வகையிலும் பல இடர்களை யும் இழப்புகளையும் பெற்று வந்திருக்கின்றேன்; வருகின்றேன். பெரும்பாலும் நேர்மையான உண்மையான முறையில் மக்கள் நலம் ஒன்றே கருதும் பொதுத்தொண்டர்கள் யாவர்க்குமே இவ்வகை ஏற்றத்தாழ்வுகளும் அவற்ருல் உண்டாகும் இடையூறு களும் இருக்கவே செய்யும்; தவிர்க்கவே முடியாது.

நான் என் இருப்பிடத்தைவிட்டு வெளியேறி, நிகழ்ச்சிகளுக் கென வெளியூர் செல்லத் தொடங்கிய காலத்திலிருந்து, பெரும் பாலும் எங்கும் தனித்துப் போனதே இல்லை. எவராவது அன்பர் ஒருவரை அழைத்துக் கொண்டே செல்வேன். பாவாணர்கூட இதை இரண்டொருமுறை தனிமையில் எடுத்துக்கூறி அதனல் வரும் நன்மைகளைவிடத் தீமைகளும் செலவுகளுமே மிகுதி என்று கண்டித்துள்ளார். ஆனல், அக்கண்டிப்பிற்குப் பின்னர்கூட, அவ் வழக்கத்தை நான் தவிர்க்கமுடியாதவனுகப் போய்விட்டேன். அதற்குக் காரணங்கள் சில உண்டு. விற்பனைக்கென எடுத்துப் போகும் நூல்களின் கட்டு, பெட்டி, கைப்பை எனக் கொண்டு செல்கையில், சுமை மாற்றுக்கோ, நூல் விற்பனைக்கோ, இடைத் துணைக்கோ ஒருவர் தேவைப்படுகின்ருர். சென்ற விடங்களில், தங்கும் அறைகளில், வருவோர் போவோரிடமெல்லாம் நானே முழு நேரமும் பேசிக் கொண்டிருப்பது இயலாது. எனக்கு ஓய்வு வேண்டிய நேரங்களில் உடன் வருபவர்களையும் அதில் ஈடுபட வைப்பேன். அவையின் பொருட்டாக மட்டுமன்றி, எல்லா நிலை களிலும் என்னுேடிருந்து பொதுநிலை ஈடுபாடுகளில் ஒருவரோ இருவரோ பயிற்சி பெறுவது நல்லதுதானே! அரசியல் கட்சிகளில் மிகு வருவாய் உண்டாகையால் இவற்றுக்கென அதிகமான பேர் முன்வருவர். ஆனல் நாம் செய்யும் தொண்டு நிலையில் ஓரிருவராகி லும் வருவது அரிதாகவே இருக்கிறது.

இந்த வகையில் உள்நாடுகளிலும் சரி, வெளிநாடுகளிலும் சரி ஒருவர் துணையாகவே இருத்தல் கட்டாயமாகி விட்டது. இதன் பொருட்டு, பல நேரங்களில் பல விடங்களுக்கும் பலரையும் அழைத்துச் சென்றிருக்கின்றேன். ஆனல் அவர்களுள் சிலரால் நான் பட்ட நன்மைகளைவிட, எனக்கு வந்த தீமைகளும் இழிவு களும் இழப்புகளுமே மிகுதி. ஒருவரை நான் சில ஊர்களுக்கு அழைத்துச் சென்றபின், அவராகவே அங்குள்ளவர்களை நண்பர்

களர்க்கிக் கொண்டு, நானறியாமல் அங்குப் போக வர இருந்து அவர்களிடம் 200, 300 என்று கைமாற்றுகள் வாங்கிக் கொண்டு இன்றுவரை அவற்றைத் திருப்பித் தராமலே போய் விட்டார். இன்னொருவர் அங்குள்ளவர்களிடம் போய் வந்து தம் முன்னேற்றத்திற்கும் புகழ் வாய்ப்புகளுக்கும் பொழுது போக்கிற்கும் அவர்களைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார். இப்படியாகச் சிலர் பொதுநிலைகளைத் தம்தம் தேவைகளுக்காகவும் வளர்ச்சிகளுக்காகவும் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். ஆங்காங்குள்ள அன்பர்களின் முறையீடுகள் பெருகத் தொடங்கிய பின்னர் தாம், நான் அத்தகையவர்களை அழைத்துச் செல்வதைக் குறைத்துக் கொண்டேன்; ஓரிருவரைத் தவிர்த்தே விட்டேன். இவ்வாறு வாய்ப்பை இழந்தவர்களும், தவிர்க்கப்பட்டவர்களும் என்னிடம் தொடர்பு கொண்டிருந்த அந்த வாய்ப்புகளை அடிப்படையாகக் கொண்டு, 'ஒன்று நன்றுள்ளாத' நன்றியில்லாதவர்களாக, பலரிடமும் அவரவர்களின் வாங்குதிறனுக்கும், அறிவு, உள்ளம் ஆகிய வளர்ச்சிநிலைகளுக்கும் ஏற்ப, என்மேல் இல்லது புனைந்தும், உள்ளது பெருக்கியும், குணம் நாடாமல், குற்றமே நாடி, பழியாகவும் இழிவாகவும் அன்றும், இன்றும், பறைசாற்றி வந்தனர்; வருகின்றனர். இத்தகையவர்கள் தரும் இடர்ப்பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல; ஆனால் பொதுநிலைகளில் இவை தவிர்க்க இயலாதவை; பொறுத்துக் கொண்டே ஆக வேண்டியவை. திருக்குறளில் இவர்களின் தன்மைகளையும், அறியாமைகளையும், அங்காப்பு ஆசைகளையும், அறிவு, மன நிலைகளையும் விளக்கமுறக் கூறிடும் பொருட்டே, செய்ந்நன்றியறிதல், அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், நட்பு, நட்பாராய்தல், தீநட்பு, கூடாநட்பு பேதைமை, உட்பகை, பெரியாரைப் பிழையாமை, கயமை முதலிய அதிகாரங்களைத் திருவள்ளுவப் பேராசான் எழுதியுள்ளார் எனலாம்.

இனி, இத்தகையவர்கள் கூறிய பழியுரைகளையும், இழிவுரைகளையும் எண்ணிப் பார்ப்பின் நெஞ்சு சுடும்; பிறர் வந்து அவர்கள் சொன்னதாகக் கூறுகையில் செவிகள் கனலும்! தொடக்கக் காலத்தில் மாணவர்கள் மிகுதியாக நம் வீட்டிற்கு வரவும் போகவும் இருப்பதைப் பார்த்து,'எதற்காக இவர்வீட்டிற்கு மாணவர்களையும் இளைஞர்களையும் மிகுதியாக வரவழைக்கின்றார் தெரியுமா, இவருக்கிருக்கும் பெண் பிள்ளைகளுக்குத் தகுந்த மாப்பிள்ளைகள் பார்த்துக் கட்டிக்கொடுக்கத்தான்!' என்பதாக ஓர் அன்பர்கூறியுள்ளார். இன்னோர் அன்பர், அவரினும் கொஞ்சம் கூடுதலான அறியாமையும் நச்சுள்ளமும் கொண்டவர், கூறியுள்ளார்: 'அவர் மனைவி மக்களை வைத்தே பொருளீட்டித் தென்மொழி நடத்துகிறார்' — என்று. இந்நிலை இன்று நேற்றன்று; தொடக்கக் காலத்திலிருந்தே கூறப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் நான் பொருட்படுத்தியதே இல்லை. பொறாமையாலும், அழுக்காற்றாலும், தாம் எதிர்பார்த்த, பார்க்கின்ற, நன்மைகள் கிடைக்கவில்லையே என்ற எரிச்சல்களாலும் சொல்லப்படுகின்ற புல்லுரைகளும்;

பொய்யுரைகளும் என்னை மேலும் மேலும் உறுதியும் ஊக்கமும் படுத்தி, என் வினையில் வேகத்தையும் விழிப்பையும் உண்டாக்கி யிருக்கின்றனவே தவிர, என் அதர்ந்த நடையை ஒரு சிறு அளவி லானும் குறைத்துவிடவில்லை. அப்புல்லுரைகளுக்குச் செவிசாய்த்து என் தூய்மையான தொண்டையும் என்னையும் புறக்கணித்தவர் களையும் நான் பொருட்படுத்தியதே இல்லை; தொண்டுக் கடுமை களைவிட, அவர்களின் அறியாமையாலும் ஆசை, அங்காப்பு களினாலும், பொறாமைப் புழுங்கலுணர்வுகளினாலும், முற்றிய தந்நலத்தினாலும் வெளிப்படும் அப்புன்மை வினைப்பாடுகளால், முன்பெல்லாம் எனக்குச் சில நேரங்களில் துன்பமாகவும் துயர மாகவும் இருக்குமே தவிர, காலப்போக்கில் அவை தூசாகவும் துரும்பாகவும் போய்விட்டன.

ஒருவர், நான் ஐரோப்பா புறப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது, நான் வானூர்தியிலிருந்து கடலில் விழுந்து சாக வேண்டும் -- என்று எனக்கு வாழ்த்து மடல்(!) அனுப்பியிருந்தார். அவர் கடந்த காலங்களில், என் மனவுணர்வைக் கெடுத்துவிட வேண்டுமென்றும், எப்படியாவது என் அறிவு முனைப்பை மழுக்கித் திசை திருப்பிவிட வேண்டுமென்றும், நேரடியாக எனக்கும், என்பால் பற்றும் துணையும் கொண்ட சிலர்க்கும், இன்னும் என்னையறிந்த தலைவர்கள் சிலர்க்கும், தொடர்ந்து எழுதிய மடல்களை ஒரு நூலாகவே வெளியிட்டால், பொதுத் தொண்டர் களுக்கு, அத்தகையவர்களைப் பற்றிய ஓர் எச்சரிக்கையாகவே அஃது இருக்கும். இயன்றால் பின்னர் வெளியிடலாம். இவை நிற்க.

இனி, கட்டுரைத் தலைப்பிற்கு வருவோம்.

அண்மையில் என்னோடு ஐரோப்பியச் சுற்றுச் செலவில் ஒரு பெருந்தினிக்காரப் பேர்(ஆசை)ஆசிரியர் ஒருவர் பங்கு கொண்டார். அவர் கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாகவே என்பால் மிக்க அன்புள்ளவராகவும், பொது நலத்தில் மிகுந்த அக்கறையுள்ளவராகவும் நடந்துகொண்டது, எனக்கு இப்பொழுது நினைத்தாலும், மிக வியப்பாகவும் புதிராகவும் இருக்கிறது. எப்படி அவரால் அவ்வாறு நடிக்க முடிந்தது? அவரிடம் நான் எவ்வளவு ஏமாறிப்போனேன்-? என்று இப்பொழுது நினைத்துப்பார்க்கிறேன்!

அவர் ஏதோ, இங்கிலாந்தில் நடக்கும் ஒரு கருத்தரங்கில் கலந்துகொள்ளத் தமக்கோர் அழைப்பு வந்துள்ளதாகக் கூறினர். அழைப்பை நான் பார்க்கவில்லை. அவர் சொல்வதை நான் நம்பி னேன்; ஆனால் அப்படி ஒரு கருத்தரங்கு நடப்பதாக அவர்க்குத் தெரிய வந்துள்ளது. அதில் கலந்துகொள்வதாக இவர் எழுதி இருக்க வேண்டும். அவர்கள் அதற்கு, அதில் அவர் கலந்து கொள்வதில் தடையில்லை என்றும், ஆனால் தங்குமிடம் தவிர, போக்குவரத்து அனைத்தும் அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எழுதியிருக்க வேண்டும் என்று கருதுகின்றேன். உண்மை வேறாகவும் இருக்கலாம். அதைப்பற்றி இப்பொழுது கவலையில்லை.

எனவே, அவர் கடன் உடன் வாங்கியும், தம் வீட்டு நகைகளை அடகு வைத்தும், பத்துப் பன்னிரண்டாயிரம் திரட்டிக்கொண்டு இங்கிலாந்து புறப்பட அணியமாயிருந்தார். அவர் பல அகர முதலிகளை எழுதியிருப்பதாகவும் ஒரு சிலவற்றை வெளியிட்டிருப்பதாகவும் எல்லாரிடமும் பெருமையாகக் கூறி வந்தார். நானும் அவர் ஆர்வத்தையும் ஓரளவு திறமையையும் மதித்து, 'உமி மலையில் ஓர் அரிசி கண்டாலும், அதை எடுத்து உவந்து போற்றும் மன நிலையில், அவரை அப்பொழுதே பாவணரிடம் அறிமுகப் படுத்தியது முதல், அண்மையில் 'தமிழ்நிலம்' இதழில் அவர் ஐரோப்பியச் செலவுக்குறிப்பை வெளியிட்டது வரை அவருக்குப் பல வகையிலும் அன்பும் ஆதரவும் காட்டி, அவரை ஊக்கி வந்தேன். இத்தனைக்கும் அவர் அறிவாற்றல் ஓர் அளவினதே! அவர் அனைத்து முயற்சியும் ஒருவகைத் தொகுப்புப் பணியே! (Compilation Work) ஓரளவு அறிவும், ஓரளவு பொறுமையும் உள்ள எவரும் இதைச் செய்ய முடியும்.

'ஆசாடபூதி' என்பான் கதை ஒன்று உண்டு. வணிகர் ஒருவரிடம் முழுத் தன்னலக்காரன் ஒருவன், அவரிடம் எவ்வாறேனும் ஒரு பெருந்தொகையைத் திருடிக்கொண்டு போய்விட வேண்டுமென்று கருதிச் சிறிது காலம் நெருங்கிப் பழக்கம் வைத்துக்கொண்டான். ஒருமுறை அவர் வாணிகத்தின் பொருட்டு வெளியூர் செல்கையில், இவனையும் அழைத்துப்போனார். வழியில் நண்பர் ஒருவரின் வீட்டில் விருந்துண்டு வருகையில், அவர் வீட்டில் இருந்த ஒரு துரும்பைத் தன்மேல் எடுத்து ஒட்டவைத்துக் கொண்டு, சிறிது தொலைவு வந்து, அதை அச் செல்வர்க்குக் காட்டித் தாங்கள் விருந்துண்டவர் வீட்டிலிருந்து இத் துரும்பு தன்மேல் ஒட்டிக்கொண்டு வந்து விட்டதாகவும், அதை அவர் வீட்டிலேயே கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வந்துவிடுவதாகவும் கூறி நடித்தான். வணிகரும் அந் நடிப்பை உண்மையென்று நம்பி, அவனை அவ்வாறு செய்து வரச்சொல்லி, அவன் நேர்மையை உள்ளூர எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தார்.

அவன் திரும்பி வந்ததும், தாம் வழியில், கொல்லைக்குப் போக வேண்டியிருந்ததால், அவனிடம் தம் கைப் பையை ஒப்படைப்பது தவறாகாதென்று கருதி, அதை ஒப்படைத்து, அவனை அவ்விடத்திலேயே இருக்கச் சொல்லிவிட்டுச், சற்று அயல்புறம் போய்ச் சிறிது நேரம் கழித்து வந்தார். அத்தகைய ஒரு வாய்ப்புக்காகவே காத்திருந்த ஆசாடபூதி அதற்கு முன்னேயே அவரின் கைப்பையுடன் ஓடிப் போயிருந்தான்.

இக் கதைக்குத் தமிழ்ப் படித்த ஒரு பேராசிரியர் மிகப் பொருத்தமாயிருப்பார் என்று நான் நினைத்துப் பார்க்கவும் வருத்தமாயிருக்கிறது. அந்த அளவுக்கு இவர்மேல் நம்பிக்கை கொள்ளுமாறு அவர் என்னிடம் நடந்து கொண்டார். ஆனால், இவர் பற்றியும் இவரின் போலி நடிப்புப் பற்றியும் முன்னரே பலர் என்னிடம் கூறி எச்சரித்திருந்தும், அந்நடிப்புகளையும் சிரிப்புகளை

யும், இவரின் கள்ளங் கவடற்ற குழந்தைத் தன்மை வாய்ந்தவை என்று கருதியிருந்தேன்.

ஆனால், ஐரோப்பியச் செலவுக்குப் பின்னால், தில்லி வரும் வரையில் என்பால் இவர் காட்டிய அன்பில் ஒரு சிறிதும் குறை யாமல் இருந்து, இப்பொழுது தமிழ்நாட்டிற்கு வந்து அவர் என்னைப்பற்றிப் பலரிடமும் இழிவாகப் பேசியும் எழுதியும் வருவதைப் பார்க்கையில், எல்லா அறிவு நிலைகளையும் உய்த்தறியும் நாம், இவரைப் பற்றி முன்பே நன்கு உணராமல் போய்விட் டோமே என்றுதான் வருந்த வேண்டியிருந்தது!

'கருமம் ஆகும் வரை காலைப்பிடி: கருமம் முடிந்தபின் காலை வாரு' என்னும் கயமைக்குச் சரியான எடுத்துக் காட்டு இவர். மேல் நாட்டுக்குப் போயும் இவரின் கீழ்மை அறிவு அழியவில்லை என்று தெரிகிறது. என் 30 ஆண்டுக்காலப் பொதுத் தொண்டில் நன்றி கொன்றவர்க்குத் தலையாய எடுத்துக் காட்டாய் என் வரலாற்றில் என்றும் நிலைத்துவிட்டார், இவர். இவரைப்பற்றித் 'தமிழ் நிலத்'தில் எழுதிய மை உலர்வதற்குள் இவர் உள்ளம் கள் ளம் நிறைந்தது என்பதையும், உலர்ந்துபோன, ஈரமற்ற, உணர்வு கொண்டது என்பதையும் மெய்ப்பித்து விட்டார். இந்தப் புகழ் அங்காப்புப் போலிப் பேராசிரியர்! ஏற்கனவே மக்களிடம் நன்கு தொடர்பற்ற ஒருவரைப் பற்றி, ஏதாவது எதிர்நிலையாக எழுதி யும் பேசியும், எளிதே விளம்பரம் பெறலாம் என்னும் நப்பாசை யாலும், சாதிவெறியும், நச்சு மனமும் கொண்ட முன்னர் நெருங்கிப் பழகிய மூவரின் தூண்டுதலாலும், என் ஐரோப்பியச் செலவு பற்றிப் பொய்யாகவும், புளுகாகவும், இழிவாகவும், இப்பொழுது பேசியும் எழுதியும் பழிதூற்றித் திரிகிறார், இப் பெருந்தினிப் பேராசிரியர், என்று நமக்குச் செய்திகள் வந்துள்ளன.

உடன் வந்த ஒரே ஓர் ஒப்புநிலை வாய்ப்பையும், ஏற்கனவே தாம் அன்பர் பலரிடமும் அறிமுகமாகக் காரணமாயிருக்கும், தமிழ்ப்பற்றையும், தமிழாசிரியப் பணியையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு, பொய்யையும் இழிவையும் பிறர் நம்புமாறு 'பறையறைந்து (குறள்: 1076) 'பயனில பாரித்துரைக்கும்' (குறள்: 193) இவர் நெஞ்சக் கொடுமையை என்னென்பது! நாய் தன் அறிவைத் தன் குரைப்பாலேயே வெளியிடுவதுபோல் தம் இயல்பறிவை இவர் 'புறஞ்சொல்லும் புன்மையால்' (குறள்: 185) வெளிப்படுத்தி விட்டார். அறிவுப் புலக் கூர்மையின்றிச் சொற்கள் திரட்டும் சோம்பேறி வேலையை, ஏதோ ஒரு பேரறிவுப் பணி என்று கூறி, அவர் போலியரை ஏமாற்றிவரும் விளம்பர வேட்கைப் பேராசிரியர் இவர். இவர் ஆர். எசு. எசு. உடனும், விசுவ இந்துப் பரிசத்துடனும் தமிழின எதிரிகளுடனும் தொடர் புடையவர் என்னும் ஓர் அஞ்சத்தக்க உண்மையையும் அண்மை யில்தான் கேள்விப்பட்டோம்.

'கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யும்' (குறள்: 699) இத் துளக்குற்ற காட்சியுடையவரைப் போய்

வழித்துணையாய்க் கொண்டேனே என்று, இங்கன்று, அவர் இங்கிலாந்தினின்று வந்து, பாரீசில் என்னோடிணைந்த இரண்டு நாட்களிலேயே உணரத்தொடங்கிவிட்டேன். ஆனாலும் என் செய்வது! கட்டுச்சோற்று மூட்டையுள் பெருச்சாளியை வைத்துக் கட்டியது போல், இவர் நடந்து கொண்ட இடர்ப்பாட்டை வெளியே காட்டிக்கொள்ளாமல், உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனத்திபோல் வாளாவிருந்து, அனைவரும் இவரை மதிக்குமாறு, அவர்களிடம் இவர் 'சிறுமையைப் புறங்காத்துச் சீரெல்லாம் தூற்றினேன். அதனால் எனக்குக் காட்டிய அன்பில் இணையன்பு இவருக்கும் கிடைத்தது. இந்நிலைகளைப் பயன்படுத்தி இவர் தம்மைப்பற்றி எழுதி வைத்திருந்த விளக்கக் குறிப்புத்தாள்களையும் அங்குப் போன இடங்களிலெல்லாம் பரப்பியும், இவர் கொண்டு சென்ற நூல்களையெல்லாம் வலிந்து விலைபோக்கியும் கொண்டார் ;

'ஏதிலார் குற்றம் போல் தங்குற்றம் காண்கிற் பின், (குறள்: 190), இவ்வாறு 'துன்னியார் குற்றமும் தூற்றித் திரிவாரோ? (குறள்: 188). ஐரோப்பா அழைத்துச் செல்லப் படும் நாள்முதல், திரும்பிவந்து, தில்லி வானூர்தி நிலையத்தில் பிரியும் வரை, 'நட்டார் போல் நல்லவை சொல்லி' (குறள்: 826) 'முகநக நட்டு' (குறள்: 786) 'பருகுவார் போல் பழகி' (குறள் : 811), 'மனைக் கெழிஇ (இப்பொழுது) மன்றில் பழிக்கத் (குறள் : 820) தொடங்கிவிட்டார்.

'முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா, இவ் வஞ்சரை' (குறள்: 824) நான் இறுதிவரை அறியாது,— போனேனே என்று இக்கால் வருந்துகின்றேன்? எனக்கு வைத்த உணவுகளைக்கூட இவரின் பெரும் பசியும் பெருவேட்கையும் அடங்கட்டும் என்று சில பொழுது எடுத்தெடுத்து வைத்தேனே! கள்ளமற்ற என் தூய்மையான அன்பைக் கண்டறிந்து கொள்ளாத இக் குள்ள மனத்தர்; ஐரோப்பா செல்லும் இறுதி நேரத்தில், இவர் நூல்களை முடிக்க இயலாத நிலையில், இவர் இறைஞ்சிக் கேட்ட அக்காலத் தினால் (குறள்: 102) நான் பயன் தூக்காது (குறள் 103) அன்புடன் ஓர் ஆயிர உருபா உதவிய, தினைத்துணையாகவும் ஞாலத்தின் மாணப் பெரிதாகவும், நன்மை கடலின் பெரிதாகவும், கருதாத, நயன் தூக்காத, பயன் தெரியாத, செய்ந்நன்றி கொன்ற இவர்க்கு உய்வு இல்லை என்பது குறளறமன்றோ? இவர்க்கு நலங்காட்டிய பொழுதெல்லாம், என்னைப், பாவலரேறு பெருஞ்சித்திரனார் என்று எழுதியவர், பேசியவர், இவர் உவப்புறும்படி- இவரின் தந்நலத்துக்குகந்தபடி—நான் நடந்து கொள்ளவில்லை என்பதற்காக, என்னை வெறும் 'பெருஞ்சித்தனார்' என்று எழுதும் இவரின் மனவேக்காடுதான் என்னே ?

'கொன்றன்ன இன்னா செயினும், அவர் செய்த ஒன்று நன்(று) உள்ளக் கெடும்' (109) என்று படித்தவர், இன்னா ஒன்றும் செய்யாது பற்பல நன்றி செய்திருந்தும், அந்த நன்றி நினையாமல் போனதுடன், தீங்கு நினைக்க இவர்க்கு எப்படி மனம் வந்தது? திருக்குறளைக் கற்றவராகவும், அதற்குப் பல சில்லுரை(!)களை

எழுதிச் சில்லறைகளைத் தொகுத்தவராகவும் உள்ள இவரா, இவருக்கு ஒரு துன்பமும் செய்யாத விடத்து, நம்மைப் புறந் தூற்ற முன்வந்து விட்டார் என்று எண்ணும்பொழுது, இக் காலத்து யாரை நம்புவது, யாரை நம்பாமல் விடுவது என்று தெரியவில்லை!

பிறர் குற்றத்தையும் தீமையையும் கூட, பிறர்பால் கூறித் திரிவதைச் சிறுமை என்றும், கயமை என்றும் இவர் படித்த திருக்குறளில் இவர் காணவில்லையா?

அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும் (980)
கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. (984)
துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர்
என்னைகொல் ஏதிலார் மாட்டு (188)
அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான். (1076)

அவ்வாறிருக்க, இவருடைய ஐரோப்பியச் செலவுக்கு நான் பல வகையிலும் துணையாயிருந்தது தவிர, வேறு என்ன குற்றத்தை இவர் கண்டறிந்தார்? தனிப்பட்ட முறையில் இவர் செய்யவிருந்த பல குற்றங்களையும்கூட அவ்வப்பொழுது நான் தடுத்து நிறுத்தினேனே. இவர் அப்பொழுதெல்லாம் என்னிடம் தம்மைப் பொறுத்துக்கொள்ளுமாறு கூறினாரே! அதனை யாரே அறிவார்?

மேலும் நான் செய்த குற்றமாக இவர் சுட்டித் திரிவன வற்றுள், இவரைத் தின்னவிடவில்லை; பரிசு பெற விடவில்லை; பொத்தகம் வாங்க விடவில்லை என்று கூறுவது, இவர் தம் தனி ஊதியத்திற்காகவே வந்துள்ள உண்மையைக் கண் கூடாக விளக்கப் போதுமே! அதுவன்றி இவர் எதைத் தின்னாமல் விட்டார்? ஆதிசைவர் என்று பீற்றித் திரியும் இவர் பன்றிக் கறியையும் கோழிக்கறியையும் கூட நான் சாப்பிடச் சொன்னேன் என்ற ஒரு சாக்கைப் போட்டுச் சுவைத்துச் சாப்பிட்டது அவற்றைப் பரிமாறியவர்களுக்கன்றோ தெரியும்!

ஒரே ஒரு நிகழ்ச்சியை மட்டும் இங்குக் கூறுகிறேன். கிழக்கு செருமனியில் நானும், விருந்தோம்பிய நண்பர் ஒருவரும், அடுத்து, ஓர் அரைமணி நேரத்தில் வீட்டிற்குப் போய், செய்து வைத்ததைச் சாப்பிடப் போகின்றோம் என்பதால், குளம்பி மட்டுமே அருந்த, எங்கள் இருவரையும் விட்டுவிட்டு, இவர் மட்டும், மிகு விலையுள்ள அவியப்பமும் (Cake), பனிப்பாற்குழையும் (Ice Creame) சாப்பிட்டு, ஏறத்தாழ 50 உருபாவுக்குமேல் அவ்வன்பர்க்குத் தண்டச் செலவு வைத்ததை, நான் அறைக்கு வந்தபின் தனித்துக் கடிந்ததை உள்ளத்தில் வைத்துக் கொண்டு, இப் பெருந்தீனிக்காரப் பேராசிரியர், தம்மைத் தின்னவிடவில்லை என்று கூறித் திரிவது இவருக்கே அருவருப்பாகவும் வெட்கமாகவும் கூட இருக்குமே!

இனி, இவருக்கு யாரேனும் பரிசு கொடுக்க வந்து, நான் அதைத் தடுத்ததாகக் கூறியதை இவர் மெய்ப்பிக்க இயலுமா? அதுபோல் இவருக்குக் கொடுத்த பணத்தை நான் இவரிடம் கொடுக்கவில்லை என்பது எத்துணை கொடுமையான பழி! எத்துணை யளவு பொய்! இனி அவர் மேலும் மேலும் என்னை இழிவுபடுத்தும் நோக்கத்துடன், எண்ணவே நெஞ்சு நடுங்கும், சொல்லவே நாக் கூசும் கூற்றுகளைப், பழிக்கும், பற்றவரும் கொடுங் கரிசுக்கும் அஞ்சாமல் கூறுவது எத்துணை கொடுமையானது! சிவகவி என்னும் பொய்யாமொழிப் புலவர் மேல், பண்பு திரிந்த, பெண் பாற் புலவர் ஒருவர், நடு அவையில் குற்றஞ்சாட்டி, வான் நிலவைச் சான்றுக்கழைத்த சூழ்ச்சி போலன்றோ இஃதுள்ளது. என் 30 ஆண்டுக் காலப் பொதுத் தொண்டில் நெடுங்காலம் பழகியும் உடன் வந்தும் எனக்கு உற்றதுணையாயிருந்த வேறு எவரும் சாட்ட முன்வராத இக்குற்றச் சாட்டை, வெறும் 23 நாள்களே, அதுவும் உணவுக்காகவும் உறைவிடத்துக்காகவும், ஊர்காணவுமே என்னைப் பயன்படுத்திக் கொண்ட இவர், கூறுவது வியப்பினும் வியப்பும், கொடுமையினும், கொடுமையும் வாய்ந்தது! இவர் தெய்வத்தை நம்புவர். எனவே அதற்குரிய விளைவை இவர் காலத்தால் பெறுவார்.

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று —

என்னும் வாய்மையுரை கருதி, இனி இவருக்கு வரவிருக்கும் நோவிற்கு நொந்து நாம் அமைய வேண்டியுள்ளதைத் தவிர, பிறவற்றை எவ்வாறு விளக்குவது? எத்தனைப் பக்கம் எழுதுவது?

நாடுகள் சுற்றிமுடிந்து தாயகம் திரும்பும் வரை, இடையில் இவரின் மனவேக்காட்டை — அழுக்காற்றை —வெளிப்படுத்தினால், எங்கே வழிச்செலவை இடைமுறித்து, இவரை முன்பே திருப்பி அனுப்பிவிடுவேனோ என்று எண்ணியும், தந்நலம் வேண்டியும் அங் கெல்லாம் அஞ்சி அடங்கிப் பணிவாகவும் குனிவாகவும் நடந்து கொண்ட இக் கைதேர்ந்த கரவு மனத்தரின் கூற்றுகள் பொய்யும் புளுகும் நிறைந்தவை என்பதற்கு மேலும் ஒரே வோர் அடையாளத்தை மட்டும் கூறி இவ்வுரையை முடிக்க விரும்புகிறேன்.

எடுத்த எடுப்பிலேயே இவர் தம் தகுதியைப் பிறர் அளவிறந்து மதிக்க வேண்டும் என்பதற்காக, இவரைக் கருத்தரங்குகளில கலந்து கொள்ளச் சொல்லி யுகோசுலாவியா, நெதர்லாண்சு, துயிசுபெர்க், அயர்லாந்து, இலிவர்ப்பூல், யார்க் முதலிய பல — நாடுகளிலிருந்தும் அழைப்புகள் வந்தனபோல் கூறி, அனைவ யும் மயங்க வைத்து, அன்பளிப்பும் நன்கொடையும் வேண்டி பெற்றுத் தம் வழிச் செலவை ஈடுகட்டிக் கொண்டுள்ளார், இவ

இவ்வகையில் இவர் பெறும் ஊதியம் பற்றியும் விளம்பரம் பற்றியும் நாம் சிறிதும் கவலை கொள்ளவில்லை; பிறரும் கவலைப் பட வேண்டாம். ஆனால், அவ்வாறு வந்தனவாகக் கூறித் திரியும் அழைப்புகளை, நேரடியாகக் காட்டச் சொல்லிக் கேட்டாலே போதும்! இவர் பொய்யுரையும் புளுகுரையும் புரை யுரையும் வெளிப்பட்டு விடும்! இவர் என்னைப்பற்றிப் பொத்தகம் எழுதிப் பணம் தொகுப்பதாகக் கூறிவரும் புன்மை ஒன்றே இவர் பொருளாசையைப் புலப்படுத்தும்! இவ்வகையான தித்திருக்கர் பயிர்க்கழியில் வளரும் களைகள் போல் என்றும் இருப்பர்! எனவே, இவர் பற்றி நல்லனவே விரும்பும் எவரும் கவலைப்படவே வேண்டா. நானும் ஒரு பொதுவிளக்கத்தின் பொருட்டே இதனையும் எழுத வேண்டி வந்தது.

குற்றந் தவிர்த்துக் குணமே காணும் பண்பை இவரிடம் நாம் என்றும் எதிர்பார்க்கவில்லை ஆனால் குணந் தவிர்த்துக் குற்றமே காணும் மிகு கீழ்மை இவரிடம் இருக்கும் என்று நாம் அன்று கனவிலும் கருதவில்லை. நாம் வெளிநாடுகளில் தனித்து, இவர் கூறும் பழிநிலைகளைச் செய்ய விரும்பியிருந்தால் கட்டுச் சோற்றுக்குள் இந்தப் பெருச்சாளியை எதற்காக வைத்துக் கட்டிக் கொண்டு போக வேண்டும்? இந்த நிலைகளையெல்லாம் அன்பர்கள் உணர்ந்தவுடன், தாங்கள் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நெஞ்சு கொதித்தும் உயிர் பதறியும் என்பால் இசைவு கேட் டனர். நான் அவர்களை அன்புடன் வேண்டி, பொதுநலங் கருதும் அனைத்துத் தொண்டர் வரலாறும் இத்தகைய கொடுமைகளைக் கொண்டிருப்பது இயல்பே என்று கூறி, அமைவுபடுத்தினேன்.— தக்கார்தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும் அன்றோ?

இனி, மிகுநம்பிக்கையாலும், மீதூர்ந்த அன்பினாலும் சற்றும் எதிர்பாராமல், நானே என்மேல் தூக்கிப் போட்டுக்கொண்ட இவ் விடர்ப்பாட்டு நிலைகளுக்குத் தக்க தீர்வு நடவடிக்கைகள் சட்டப்படி எடுக்கப்பட்டு வருகின்றன. எனவே அன்பர்கள் யாரும் இது வகையில் பேராசிரியர் மேல் எவ்வகையான நேரடி நடவடிக்கை யும் மேற்கொள்ள வேண்டாமென்று அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு! — 423

சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு — 976

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும். — 980

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். — 519

# இயல்பியலா, இயற்பியலா - எது சரி?

பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரையார், க.மு.

தென்மொழியில் மக்கள் குரல் பகுதியில் 'இயற்பியல்' (Physics) என்ற தமிழ்ச் சொல்லாக்கத்தில் வல்லின 'ற்'கரம் இடம் பெற்றிருப்பது பொருந்துவது ஆகுமா என்று ஓர் அன்பர் கடா எழுப்பியிருந்தார்.

இந்த அறிவியல் துறைக்குரிய ஆங்கிலச் சொல் (Physics). உடலியல் (Physiology) என்ற துறைக்குரிய பெயர் போலவே 'உடல்' என்ற மூலச் சொற் பொருளினை உடையது. அத்துறை கருநிலையிலிருந்த காலத்தில் இடப்பட்ட தவறான பெயரே இன்னும் மரபு கரணியமுமாகத் தொடர்ந்து வழங்குகிறது. மருத்துவர் (Physician), இயற்பியலார் (Physicist) என்ற வழக்காறுகளில் ஆங்கில மொழி இதன் சொல் விரிவில் மட்டும் நுட்ப வேறுபாடு உண்டு பண்ணியமைகிறது.

சமசுக்கிருதவாணர் இத்துறைக்கு (Physics) பௌதிகம் என்ற பெயரும், இதனோடிணைவான அணுக்கத் துறைக்கு (Chemistry) முதலில் இரசாயனம் என்ற பெயரும், பின் 'வேதி' நூல் என்ற பெயரும் ஆக்கினர். ஆங்கிலத்தில் அரபு மொழி வேர்ச் சொல்லும் (Al - Chemy - இரசவாதம், பொன்மாற்றுச்சித்து) சமக்கிருத வாணரின் முதல் சொல்லும் இத்துறைகள் கருவளர்ச்சி நிலையில் இருந்த காலத்திய அரை குறை விளக்கச் சொற்களேயாகும். வேதி நூல் என்ற புதுப் பெயர். (பேதித்தல் -, வேதித்தல், மாற்றுதல்- தமிழக அறிஞர்களாலேயே பழந்தவற்றைத் திருத்த எழுந்த சொல் ஆகும்.

தவிர, இருதுறைகளின் அணுக்க உறவை ஆங்கிலப் பெயர்களோ, சமக்கிருதப் பெயர்களோ குறித்துணர்த்த முடியாத நிலை ஒரு வகையில் அம்மொழிகளுக்கு ஒரு குறைபாடேயாகும்.

இவ்விரு துறைகளும் நன்கு வளர்ச்சி பெற்று அவற்றின் அணுக்கத் தொடர்புகள் விளங்கத் தொடங்கிவிட்ட காலத்திலே தான் தமிழறிஞர்கள் (இக்கட்டுரையாசிரியர் உட்பட) நல்ல தமிழாக்கம் தேடினர். முதலில் பொருளியல் (Physics), இயைபியல் (Chemistry) என்ற சொற்கள் கையாளப்பட்டன. பிந்திய துறைப் பெயர் இன்றும் தொடர்ந்து நிலைத்துள்ளது. ஏனெனில் அது அத் துறையை ஓரளவுக்குச் சரிவர விளக்குவதாய் உள்ளது. ஆனால் முன்னையது ஆங்கில, சமக்கிருதப் பெயர்களை அப்படியே நேரடியாக மொழி பெயர்க்க முனைந்ததனால், புதிய சூழலில் சிறிதும் பொருத்த மற்றதாயிற்று. ஏனெனில் அது பெரும்பாலான அறிவியல் துறைகளுக்கே (Physical Of Material Sciences) பொருந்துவது ஆகும். இது மட்டுமன்று; செல்வ இயலுக்கும் கூட

(Economics) அது பொருந்துவதாகும். ஏனெனில் பொருள் என்ற சொல் தமிழில் செல்வத்தையும் குறிக்கும்.

இயங்கியல் என்ற சொல் சிலகாலம் இத்துறைக்குப் பயன் படுத்தப்பட்டது. ஆனால் இத்துறையின் பகுதிகளாக நிலையியல் (Statics), இயங்கியல் (Mechanics Or Dynamics) ஆகியவை அமைந்துள்ள நிலையில் இது குழப்பம் விளைவிக்கும் சொல் ஆயிற்று. இச்சூழலில் இத்துறையின் மொத்தப் பெயரை மட்டும் இயக்கவியல் என்று மாற்றி அறிஞர் சிலகாலம் அமைதி கண்டனர். ஆனால் நிலையியல் என்ற உறுப்பை உள்ளடக்கிய சொல்லாக இதுவும் அமையவில்லை.

சரியான சொல்லின் தேட்டம் நீடித்தது.

இயைபுக்கு எதிரிணையாக இயல்பு என்றோ இயல்வு என்றோ, இயல் என்றோ பெயரின் முற்கூறு அமையலாமா என்பது ஆராயப் பட்டது. இயல்பு, இயல்வு சரிவர எல்லாப் பகுதிகளையும் உட்படக் குறிக்கவில்லை. இயல் என்பதோ, இயலியல் என்றாகிக் குழப்பு வதனுடன், 'பொருளியல்' என்ற பெயரின் குறைபாட்டையும் உடையதாகவே பொருந்துவது ஆகும்.

ஏனெனில் அது எல்லா இயல் நூல்களுக்கும் (Natural Sciences) அமைந்திருந்தது.

இந்நிலையில்தான் இக்கட்டுரையாளர் தம் அகர முதலிகளில் இயற்பியல் என்ற பெயரைக் கையாள நேர்ந்தது. இயல்பு என்ற சொல்லின் இயற்பு என்ற திரிபே, நிலையியல், இயங்கியல் ஆகிய இயற்பியற் பகுதிகளை மட்டுமன்றி, விசையியல் (Dynamics), ஒலியியல் அல்லது ஓசையியல் (Sound), ஒளியியல் (Light) மின் காந்தவியல் (Magnetism and Electricity) புதிய அணுப்பிளவியல் (Atomics) ஆகிய எல்லாவற்றையும் குறித்துக் காட்டத்தக்க தாய் அமைந்துள்ளது காணலாம்.

மாநிலக்கல்லூரியின் இயற்பியற் பேராசிரியப் பெருந்தகையார் தம் புதிய எழுந்தாக்க நூலாக்கங்களில் இச்சொல்லைத் தேர்ந்து பயன் படுத்தியுள்ளார். சொல்பரவியும் வருகிறது.

இன்னும் சிறந்த சொல்லை வருங்காலம் காணக் கூடுமாயினும், ஆங்கில, சமக்கிருத மொழிச் சொற்கள் போல, வழக்கில் பரவி விட்ட பின், இதுவே நீடிக்கலாம், நிலைக்கலாம் என்று கருத இடமுண்டு. வேண்டுமானால் வருங்காலத்தில் ஒரு சிறு முன் னேற்றமாக எல்லா அறிவியல் துறைப் பெயர்களும் 'இயல்' என்ற ஈறு இல்லாமலே 'அம்' என்ற ஈறு சேர்த்து வழங்கப்படுதல் நலம் தருவதாகும்.

தென்மொழியில் வினு எழுப்பிய அன்பரின் மனக்குறை இவை பற்றியதன்று. அது தமிழ் இலக்கணம் பற்றியதாகும். தமிழிலக்கணத்தை விடத் தமிழ் மரபு வலிது என்பதையும் பலர் ஏற்பர் என்பதில் ஐயமில்லை.

அன்பு என்ற சொல் புணர்ப்பில் அற்பு (நாலடியார் : அற்புத் தளை) என்றும், அல்குதல் என்பது அற்குதல் (திருக்குறள் : அற்குப) என்றும் வழங்குகின்றன. அரசுக்கட்டில் என்றே இலக்கணப்படி அமைய வேண்டிய தொகைச் சொல் தவிசு என்ற தனிப்பொருளில் அரசு கட்டில் என்றும்; அரிசியற் கிழார் என்றே அமைய வேண்டிய இயற் பெயர் (முதலில் அரசில் கிழமை என்ற ஆறும் வேற்றுமைத் தொகையான தனுலோ பிறிது காரணமாகவோ) அரிசில் கிழார் என்றும் பண்டைக் கழக இலக்கிய மரபிலேயே வழங்கியுள்ளன.

தவிர, பொருள் மாறுபாடு சுட்டும் நிலையில், திசை காட்டும் போது மட்டும் கீழ், மேல் ஆகிய சொற்கள் கீழ் காற்று, மேல் காற்று என்றும்; 'ஆயிரம் காக்கைக் கோர் கல்' என்ற நாலடியார் வழக்கில் 'ஒரே' என்ற அழுத்தப் பொருள்பட 'ஒரு' என்பது ஓர் என்றும் வழங்கியுள்ளன. தமிழ் நாடு அரசு, அரசு போக்குவரத்து என்ற இந்நாளைய நம் கால வழக்குகளும் இப்பழந்தமிழ் மரபின் நம்காலத் தொடர்ச்சியேயாகும்.

"இயற்பியல்' என்பது இதே பண்டைப் பழமரபின் இன்றைய புத்துயிர்ப்பு என்று கருதல் தகும்.

---


## "தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும்முதல்நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் : | 15 உருபா | 35 உருபா | 35 உருபா |
| அரையாண்டுக் கட்டணம் : | 8 ,, | 18 ,, | 18 ,, |
| தனியிதழ் : | 1-25 ,, | 3 ,, | 3 ,, |

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# நாவலர் பண்டித.
# ந. மு. வேங்கடசாமியார்
# நூற்றாண்டு விழா வேண்டுகோள்!

பேரன்பு சான்ற பெருந்தகையீர். வணக்கம் நாட்டு மக்கள் அனைவராலும். "நாட்டார் ஐயா" என்று அன்புடன் அழைக்கப் பெற்ற நற்றமிழ் அறிஞராகிய நாவலர், பண்டித, ந.மு. வேங் கடசாமி அவர்கள் கழனிகள் மிகுந்த காவிரி நாட்டின் ஒரு பகுதி யாகிய தஞ்சை மாவட்டத்தில்-திருவையாற்றுக்கு அருகில் உள்ள நடுக்காவேரி என்னும் சிற்றூரில், வீ.முத்துச்சாமி அவர்களுக்கும். தையலம்மாளுக்கும் நன்மகனாகப் பிறந்தவர் ஆவார். 12-4-1884 -இல் பிறந்து, இந்நிலவுலகில் அறுபது ஆண்டுகள் வாழ்ந்து 28-3-1944இல் மறைந்த ஐயா அவர்கள்

"மன்னுவுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே"

என்னும் புறநானூற்றுப் பாடலடிகளுக்கு ஓர் எடுத்துக்காட் டாக விளங்கியவர்கள் ஆவர்.

தமிழ் நாட்டில் தமது இனிய பண்பாலும், புலமை வளத் தாலும், தன்னிகரற்றுத் தமிழ்ப்பணி ஆற்றிய திறத்தாலும் தலை சிறந்து விளங்கிய ஐயா அவர்கள்-ஆசிரியர் எவருடைய உதவியு மின்றித்தாமே தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சைவ சித் தாந்த நூல்களையும் ஐயம் திரிபறப் பயின்று, மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய நுழைவுப் பண்டிதம், பால பண்டிதம், பண்டி தம் ஆகிய மூன்று தேர்வுகளையும் முறையே 1905, 1906, 1907, ஆகிய ஆண்டுகளில் எழுதி முதல் மாணுக்கராகத் தேர்ச்சி பெற் றூர்கள்; இவ்வாறு முத்தேர்வும் மூவாண்டில் முறையாக எழுதி முதன்மையாகத் தேர்ச்சி பெற்றமையால் மதுரைத் தமிழ்ச் சங் கத்தைத் தோற்றுவித்த பெருமகனாராகிய பாண்டித்துரை அவர்களால் தங்கப் பதக்கமும், தங்கத் தோடாவும் அணிவிக்கப் பெற்றுப் பெருமை அடைந்தார்கள். இதனால் தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியராகிய ஐயா அவர்களின் புகழ் நாடெங்கும் பரவுவதாயிற்று.

'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்பதற்கு ஏற்ப வேங்கடசாமி ஐயா அவர்களுடைய கல்வி அறிவாற்றலைக் கேள்வியுற்று அவரைத்தம் நிறுவனத்தில் வந்து பணிபுரியுமாறு வேண்டிக்கொண்ட கல்வி நிறுவனங்கள் பல.

கோயம்புத்தூர் தூய மைக்கேல் மேனிலைப்பள்ளியில் தமிழா சிரியராக ஓராண்டும் (1909), திருச்சி பிசப் ஈபர் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக இருபத்து நான்கு ஆண்டுகளும் 1908, 1910 முதல் 1933 வரை) அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தில் தமிழ்ப் பேராசிரியராக ஏழு ஆண்டுகளும் (1933—40) பணிபுரிந்து ஓய்வுபெற்ற ஐயா அவர்கள் தமிழவேள் உமாமகேசு வரனர் அவர்கள் விரும்பியவாறு கரந்தைப் புலவர் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் (1941-44) ஊதியம் பெறுமல் மதிப்பியல் முதல்வராகப் பணி செய்து சிறப்பித்தார்கள்.

இலக்கிய நிகழ்ச்சிகளுக்குத் தலைமை தாங்குதல், சொற்பொழிவுகள் ஆற்றுதல், சைவசித்தாந்த சமயச் சொற்பொழிவுகள் செய்தல் ஆகியவற்றை இடையறாது செய்துவந்த ஐயா அவர்களுக்கு 24—12—1940 இல் சென்னையில் நடைபெற்ற சென்னை மாநிலத் தமிழ் மாநாட்டில் "நாவலர்" என்னும் சிறப்புப் பட்டம் செப்பேட்டில் பொறித்து வழங்கப்பெற்றது.

அகநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை திருவிளையாடற் புராணம், இன்னாநாற்பது. இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி ஆகிய நூல்களுக்கு உரையெழுதித் தமிழ்க் கடலாக விளங்கிய வேங்கடசாமி ஐயா அவர்கள், தம் நுண்மாண் நுழைபுலத்தினால் ஆராய்ந்து, வெளியிட்ட தமிழாராய்ச்சி நூல்கள் பலவாகும். அவை கள்ளர் சரித்திரம், வேளிர் வரலாற்று ஆராய்ச்சி, நக்கீரர், கபிலர், கண்ணகி, வரலாறும் கற்பு மாண்பும், சோழர் சரித்திரம், கட்டுரைத் திரட்டு என்பனவாகும், மேலும், தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச்செல்வி, செந்தமிழ், சித்தாந்தம் முதலிய தமிழாராய்ச்சித் திங்கள் இதழ்களில் வெளிவந்த அவருடைய ஆய்வுக் கட்டுரைகள் பலவாகும்.

1921-22 இல் திருவருட் கல்லூரி என்னும் பெயரில் கல்லூரி ஒன்று நிறுவ முயற்சிசெய்து, அவரது எண்ணம் நிறைவேறாமற்போகவே, 1925—26 இல் தஞ்சையில் அல்லது திருச்சியில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்பெற வேண்டுமென்று விரும்பி, அறிஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து, அப்பொது சென்னை மாநில அமைச்சராக இருந்த டி. என். சிவஞானம் அவர்கள் தலைமையில் அமைத்த செயற்குழுவில் ஓர் உறுப்பினராக இருந்து செயலாற்றிச் சிறப்பித்தார்கள்.

இவ்வாறு தம் வாழ்நாள் முழுவதும் தமிழுக்காகவே தொண்டு செய்து வாழ்ந்த நாவலர் ந. மு. வேங்கடசாமி அவர்களின் நூற்றாண்டுவிழா 12—4—1984 இல் சிறப்புற நிகழவுள்ளது. அந்நூற்றாண்டு விழாவின்போது ஐயா அவர்கள் எழுதிய நூல்கள் அனைத்தையும் மறுபதிப்புச் செய்யவும், தஞ்சை, திருச்சி, கோவை, மதுரை, சென்னை, அண்ணாமலை நகர் முதலிய இடங்களில் தமிழ் விழாக்கள் நடத்தவும் "நாவலர் ந. மு. வேங்கடசாமி கல்வி அறப்பணிக் கழகம்" என்னும் பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவவும் திட்டமிட்டுப் பணிகள் நடந்து வருகின்றன.

மேற்சுட்டிய பணிகள் சிறப்புற நடைபெறத் தேவையான கருத்துரைகளை வழங்குவதோடு, தம்மால் இயன்ற பொருளுதவி செய்யுமாறு தமிழ் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம். காசோலை (Cheque) அல்லது வரைவோலை (Draft) வழங்குவோர்.

# வட்டம்

தமிழிலக்கியங்கள் வட்டத்தையும், வட்ட வடிவினையும் பலகோணங்களில் உணர்த்துகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்:

'வில்லே வட்டப்பட வாங்கி' —வளைவு— (தேவாரம்)
'புகரினர்சூழ் வட்டத்தவை' —வளைதடி— (பரிபாடல்)
'பாகொடு பிடித்த வளைசூழ்வட்டம்— வட்டமான அப்பம்
(பெரும்பா, 278)
'வடவர் தந்த வான்கேழ் வட்டம்'— வட்டக்கல்
(நெடுநல்-51)
'வட்டம் தொகுத்தது வாணிபம் வாய்த்ததோ —
— நிறைகோல் தட்டு — (திருமந். 1781)
'ஐயிரு வட்டமொடு எஃகுவலந்திரிப்ப'
— வட்டக் கேடகம் — (திருமுருகா 111)
'வட்டப் பெருவிசிறி, செங்கேழ் வட்டஞ் சுருக்கி'
— ஆலவட்டம்
'கோயில் வட்டமெல்லாம்'— சுற்றுப்பக்கம். (சீவக 949)
'புரவி வட்டந்தான் காட்டுகின்றூர்க்கு'
வட்டமான செலவு (சீவக. 442)
'விநாயகர் நாமத்தை நூற்றியெட்டு வட்டஞ்செய்து!
—ஒருதடவை. (விநாயகர் புராணம் 74:214)
ஆட்டை வட்டம் காசு ஒன்றுக்கு'
— தோறும். (511, 11, 122, 27)
'சக்கரத்தின் சூட்டு' — வட்டிகை
'இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென' (அகம். 167)

நன்றி — 'நன்னன் நாடு' நவ. 15'-83

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

The Treasurer,
N. M. Nattar Centnnary Celebration Committee.)
Thanjavur-7.
என்று எழுதி, Account Payee-என்று குறிப்பிட்டுக் Cross செய்து,

திரு. யு.சுப்பிரமணியம், இ. ஆ. ப (ஓய்வு) அவர்கள்
பொருளாளர்
ந. மு. வே. நூற்றாண்டு விழாக்குழு,
10. இரண்டாம் தெரு இராசப்பா நகர்
தஞ்சாவூர்—613 007.
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

நன்றி, இங்ஙனம்,
ந.மு.வே. நூற்றாண்டு
விழாக் குழுவினர்.

தஞ்சாவூர்.
30—8—1983

# திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்து சமயம்

சிந்தனைச்செம்மல் : கு.ச.ஆனந்தன்

## "திராவிட இயக்கங்களின் தற்போதைய பார்வை:"

தந்தை பெரியார் அவர்களின் தலைமையில் இயங்கிய திராவிடர் கழகம்,. பகுத்தறிவுக் கொள்கை, கடவுள் மறுப்பு, மத எதிர்ப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, சாதிய அழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, இனவிடுதலை, குமுகாயச் சீர்திருத்தங்கள், பெண் விடுதலை ஆகிய ஒன்பது களங்களில், நின்று போரிட்டு வந்தது. தந்தையார் மறைந்தார்கள்; அவர் தந்த தன்மான மெய்ம்மங்கள் மறையவில்லை

இந்து சமயம் தந்த சாதியம் சமயப் பழக்கங்கள், சாத்திரங்கள், புராணங்கள் வருணவழிக் கொள்கைகள் மூடநம்பிக்கைகள் ஆகியவை தமிழ்க் குமுகாயத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஆழ்ந்து வேரோடி அழுகிப்போய் விட்டமையால், **அவற்றைக் குமுகாயப் புலத்தில் நின்றே அழித்திட வேண்டும், அரசியற் சார்பு அதற்குத் தேவையில்லை** என்ற உயர்ந்த நடைமுறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு, இன்றும் திராவிடர் கழகம் முனைந்து செயல்பட்டு வருகிறது.

**"இந்து" சமயம் என்பது முடைநாற்றம் நிரம்பிய பார்ப்பனியத்தையும் சாதியத்தையும், சுரண்டலையும், பிரிவு (வர்க்க) வேறுபாட்டையும் நிலைப்படுத்தும் ஓர் ஏமாற்று (மோசடி) அமைப்பு; அதனை அடியோடு ஒழித்தால்தான், குமுகாயச் சமநிலை மலரும்"** என்பது திராவிடர் கழகத்தின் தெளிந்த பார்வை.

ஆனால் காலக் கட்டாயத்தால் அரசியல் கட்சியாய்—ஆட்சிக் கட்சியாய்—பின்னர் எதிர்க்கட்சியாய்—மலர்ந்துவிட்ட திராவிட முன்னேற்றக் கழகம் பார்ப்பனர் உள்ளிட்ட, அனைத்துப் பிரிவினரையும் அணைத்துச்செல்ல வேண்டிய கட்டாய நிலைக்குத் தானே ஆளாகியது. பார்ப்பனியத்தை எதிர்த்தாலும் அதனை வளர்க்கும் பார்ப்பனர்களையும், 'பிராமணச் சங்கங்'களையும் நேரடியாக எதிர்த்துக் கிளர்ந்தெழ முடியாத இக்கட்டான நிலை. இந்துமதத்தை எதிர்த்தாலும், வருண முறையையும், சாதீயத்தையும் முழுமையாக அகற்றத் தனித்துப் போராட முடியாத தமிழக அரசியல் சூழ்நிலை; இனமானத்தைப் போற்றினாலும் அரசமைப்பை மீற முடியாதே! அதற்குரிய பக்குவத்தைத் தமிழகம் பெறும் வரை காத்திருக்க வேண்டிய கடமை உணர்வு; தமிழர் நம் தனித்தன்மையை—பண்பாட்டை, எதிரொலிக்கும் புதியதொரு சமன்மைக் குமுகாயத்தைப் படைக்க விழைந்தாலும், அரசியல் மற்றும் அரசமைப்புக் காரணங்களுக்காக (POLITICAL AND CONSTITUTIONAL REAS-

ONS) தலைமை அமைச்சர் இந்திரா காந்தியுடன் இயைந்து செல்லும் அரசு தந்திரத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய இடைக்கால இழி நிலை; இந்துக் குமுகம் என்று ஒரு குமுகம் இருக்க முடியாது எனத் திண்ணமாக நம்பினாலும் இந்துச் சட்டத்தையோ, சாத்திரங் களையோ, மனுதர்மத்தையோ தகர்த்திடும் - சட்டத்திற்குப் புறம் பான—நேரடிச் செயல் முறைகளில் இறங்க முடியாத அனைத்து இந்தியச் சூழ்நிலை. இவை தி.மு.கழகத்தின் இந்துமதம் பற்றிய பார்வையிலும் குமுகாயச் சீர்திருத்தத்திலும் ஒருவகைத் தற் காலிக மந்த நிலையையும் தேக்கத்தையும் தோற்றுவித்துள்ளன என்பது உண்மைதான். ஆனால் தி.மு.க. இரண்டாகப் பிளவுண்ட தும் அ.தி.மு.க. ஆட்சியினைக் கைப்பற்றியதும் இத் தேக்கத்திற் குரிய மூல காரணங்களாக இருக்கலாம் அன்றோ? இடைக் காலத்தில் தீவிர உணர்ச்சி சற்று மங்கி, திராவிட இயக்கங்களிடையே காழ்ப் புணர்ச்சியையும், வெறுப்புணர்ச்சியையும் வளர்த்துவிட்டதும் இதற்குச் சொல்லப்படும், இன்னொரு காரணம். **இந்துமதம் மீண்டும் புத்துணர்ச்சியையும், புதுவலிவையும் தேடிக்கொள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின இன்றைய இடைக்காலத் தீவிர எதிர்ப் பின்மை, மறைநிலையில் பெரியதொரு வாய்ப்பாக** அமைந்து **விட்டது என நடுநிலை நோக்காளர்கள் கருதுகின்றனர்.** ஆனால் இந்துமதம் பற்றிய தன் பழைய சரியான கண்ணோட்டத்தை, திராவிட முன்னேற்றக் கழகம் இன்றும் கொள்கையளவில் மாற்றிக் கொள்ளவில்லை.

திராவிட இயக்கத்தின் இன்னொரு "சிதைந்த கூறு" அண்ணா தி. மு. கழகம். கொள்கை வேறுபாடு என்ற காரணத்தினால் உருவானதன்று இக்கட்சி. இந்துமதம் பற்றியும் சாதியம் பற்றியும் முழுமையான எதிர்ப்புக் கண்ணோட்டம் அ. தி. மு. க. தலைவர் களிடையே இன்றும் ஓரளவு நிலவி வருகிறது என்றாலும், சாதீயம், வருணமுறை, சாத்திரங்கள் பற்றிய திராவிட இயக்கத்தின் நெடுங் கால எதிர்ப்பு நிலையை. வரலாற்றின் அடிப்படையில் புரிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லாத, புதிய இளைஞர்கள் இக் கட்சியில் பெரும்பாலும் பரவி இருப்பதால், பழைய இந்துமத எதிர்ப்பும், தீவிர மான இன உணர்வும், பெரியாரின் சீர்திருத்தக் கொள்கைகளும் அவர்களிடையே இன்னும் ஆழப்பதியவில்லை. அதனால் அதன் இந்து மத எதிர்ப்பும் பார்வையில் சற்று மந்தநிலை மறைமுகமாகப் படிந்துள்ளது. **குமுகாய மறுமலர்ச்சி இன்னும் பல ஆண்டுகளுக் குத் தள்ளிப் போடப்பட்டு விட்டது.** காரணம், அக்கட்சியில் உள்ள இளைய தலைமுறையினர் அறிவு நிலையில், பெரியாரியத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாமல் ஆளுங்கட்சி என்ற இடைக்கால நிலையை பேணிக்காத்து வருகின்றனர்; இந்துமத எதிர்ப்பில் சற்று மங்கிய பார்வையுடன் மயங்கி நிற்கின்றனர்.

ஆட்சிப் பொறுப்பில் இருந்த காரணத்தினால், அதனைப் பயன் படுத்திப் பெரியார் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி யும், பெரியார் பற்றிய கருத்துகளை மக்களுக்குத் தெரிவித்தும் திராவிட இயக்கத்தின் தலைமைசால் பகுதியென அவ்வப்போது தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளவும் அ. தி. மு. கழகம் தவற வில்லை.[7] ஆனால் ஆட்சிக் கட்சிக்குத் தேவையான அரவணைப்பை யும், பார்ப்பனர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கேற்ற அணுகு முறைகளையும் அரசதந்திரமாகக் கையாளவும் அக்கட்சி தவறவில்லை. அதற்குக் காரணம் அமைப்பு நிலையிலும் அறிவு நிலையிலும் வலிவு மிக்க இன்னொரு திராவிட இயக்கப் பகுதியான தி. மு. கழகத்தை அரசியல் புலத்தில் எதிர்த்து நடைபோட வேண்டிய இக்கட்டான நிலையே.

'பிராமணர் சங்கங்'களுக்கும் பார்ப்பனியத் தலைவர்களுக்கும்' வருண அமைப்பு, மற்றும் சாதியத்திற்கும் இனிய நண்பன்போல் தன்னை அடையாளம் காட்டிக்கொண்டும் வருகிறது: அதுவும் ஒரு வகையான அரசு தந்திரம் என்ற காரணமும் அதற்குக் கூறப்படு கிறது. வரலாற்றில் இடம் பெறாத "திராவிட இந்து சமயம்" என்ற ஒரு கற்பனையையும், சூழ்நிலைக்குத்தக அக்கட்சித் தலைவர் வெளி யிட்டார்.

வகுப்பு முறை பற்றிக் கொள்கையில் முதலில் சற்று வழுக்கினா லும், பின்னர் தன் நிலையறிந்து, அதனை மாற்றிக்கொள்ள அக்கட்சி தயங்கவில்லை. திருக்கோயில்களில், தமிழ் வழிபாட்டை நடை முறைப்படுத்தும் தீவிரத்தைக் காட்டாவிடினும், வடமொழி மரபு களுக்கு நேரடியாக வால் பிடிக்கும் நடவடிக்கைகளில் அக்கட்சித் தலைவர்களில் சிலர் ஈடுபடவில்லை என்பது கண்கூடு.

ஆட்சியை நிலைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அ. தி. மு கழகத்தின் பொதுவான பார்வையில் இந்துமத எதிர்ப்பு, சாத்திர மரபுநிலை அழிப்பு, குமுகாயச் சீர்திருத்தம் என்பவை ஓரளவுக்கு அரசியல் சூழ்நிலைக்கு உகந்த பேச்சுகளாகவே இன்று இருந்து வருகின்றன என்று அரசியல் நோக்காளர்கள் கருத்துத் தெரிவிக் கின்றனர். ஆனால் இந்துமத எதிர்ப்புப் பார்வையை முற்றிலும் அஃது இழந்துவிடவில்லை.

தந்தை பெரியாரின் மறைவுக்குப் பிறகு திராவிடக் கழகமும் பல கூறுகளாகப் பிரிந்துவிட்டன ; என்றாலும் இந்துமதம் பற்றிய பெரியாரின் பார்வைதான் அப்பகுத்தறிவுக் கூறுகளின் தனித்தனிப் பார்வையும் ஆகும்,

## முடிவுரை

திராவிட இயக்கங்களில் இக்கட்டான இக்கால கட்டத்தில் இந்துமதத்தின் உயிர்க்கூறான பார்ப்பனீயம், தனது உயர் வளர்ச்சிக்

கட்டத்தை நோக்கி மீண்டும் விரைந்து நடைபோடுவதில் வியப்பில்லை. இத்துணைக் காலமாகப் பெற்ற குமுகாய விழிப்புணர்ச்சியும், சாதிய ஒழிப்புத் தீவிரமும் இந்துமத எதிர்ப்பும் பழங்கதைகளாகிப் பகற்கனவாகிப் பாழுடைந்து விடுமோ என்ற அச்சம், தமிழகத்தைப் பற்றிக் கொண்டுள்ளது.

இவ்வகையில் இந்துமதம் பற்றிய "இரு வகையான கண்ணோட்டங்கள்" திராவிட இயக்கங்களில் தற்காலிகமாக நிலைபெற்றுவிட்டன என்பதை மறுப்பதிற்கில்லை. சாதியமும் இந்து சமயத்தின உள்ளடக்கம். அத்தகைய இந்து சமயத்தின் அடிப்படை நிலைபாடுகளை எதிர்க்காமல்-இழக்காமல்-தகர்க்காமல்-சாதியத்திற்கு எதிர்ப்பான மனப்பக்குவத்தை மக்களிடையே படைக்க முடியாது. புதிய போராட்டக் கொள்கையைச் செப்பனிடவும் முடியாது.

"திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்துமதம்" என்ற ஆய்வு இனித் தேவையில்லை போலும். அது முடிவாகிவிட்ட ஒன்று, மாறாக 'திராவிட இயக்கங்களின் செயற்பாட்டில் இந்து மதத்தின் நிலை' என்று சீராய்பு (REVIEW) தான் இனி வேண்டும். ஏன்? இன்றைய சூழ் நிலையில் 'இந்து மதத்தினர் பார்வையில் திராவிட இயக்கங்கள்" என்ற புதிய ஆய்வை, பார்ப்பனியம் மேற்கொண்டு விட்டது.

இந்து சமயம், பல்வேறு நம்பிக்கைகளின் கூட்டுக் கிடங்கு, என்ற **பன்மை நிலைய** எதிர்த்தது, திராவிட இயக்கம் என்ற **ஒருமை அமைப்பு**. அந்நிலை இன்று மாறி, இந்து சமயத்தின் ஒருமை நிலையைப் பன்மை நிலைக்கு ஆளாகிய பல திராவிட இயக்கங்கள் ஆய்வு செய்கிற அவலநிலை உருவாகி விட்டது. இந்து மதம் படைத்துப் பூசை போட்டுப் போற்றி வளர்த்து வரும் சாத்திரக் குப்பைகளை, புராணப் புரட்டுகளை, செல்லரித்துப்போன ஆகமங்களை, நால்வண்ண அமைப்பு முறையை, சாதியத்தை இந்துச் சட்டத்தைத் தகர்த்தெறிய, பிளவுபட்ட திராவிட இயக்கங்கள், ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும். பொருளியல் சமன்மைக்கு முன்னோடியான குமுகாயப் பொது உரிமையைப் பெறுவதற்குத் தமிழக ஆட்சியைக் கைப்பற்றும் முயற்சி மட்டும் போதாது. இந்து மதம் தந்த அவலநிலையை, அரசமைப்பை, குமுகாயச் சீரழிவை, முதலாளியத்தை, சுரண்டலை முற்றாக மாற்றிப் புதியதொரு குமுக மாற்றம் காண, திராவிட இயக்கங்கள், தம் இகலை மறந்து ஒற்றுமை பெற்று உறுதியுடன் இனி செயலாற்றவும் வேண்டும். (முற்றும்)

மேற்கோள் குறிப்புகள்

(1) (1904) 31 Calcutta 11, 15,
Bhagwan Koer Vs. Bose.

(2) "தெய்வத்தின் குரல்" முதற்பகுதி - பக். 267.

# மீண்டும் மறு ஆய்வு செய்து நல்லமுடிவெடுங்கள்!

**49 :** தென்மொழி வாயிலாகத்தான்
உங்களை உலகம் விளங்கிக் கொண்டது!

பேரன்புக்குரிய ஐயா,

வணக்கம். தென்மொழி சுவடி 19 ஓலை 5-இன் ஆசிரியவுரை என் நெஞ்சில் ஆயிரம் வேல் தைத்தாற் போன்ற அதிர்ச்சியையும், தலையில் தாங்கொணு சம்மட்டி அடி விழுந்தது போன்ற உணர்வையும் நல்கித் திகைப்புறச் செய்து விட்டது.

தென்மொழிப் பாசறையால் உருவான சில ஆயிரக்கணக்கான அறிவாளிகளால் பல்லாயிரக்கணக்கான இன உணர்வுமிக்க அடலேறுகளை -, மான மறவர்களை - மெய்த்தமிழ் அன்பர்களை எதிர்காலத் தமிழகம் அடைந்தே தீரும். ஐயம் சிறிதும் வேண்டா.

'தமிழ்நிலம்' செழுமையுற, தென்மொழிப் பட்டறை ஏன் மூடப்பெற வேண்டும்? தமிழ்ச் சிட்டு ஏன் பறப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்? என் போன்ற தென் மொழி அன்பர்கள் தங்கள்

---

(முன பக்கத் தொடர்ச்சி

(3) SECTION 2 (i) (a) - HINDU MARRIAGE ACT 1955
(4) SECTION 2 (i) (b) - HINDU MARRIAGE ACT 1955.
(5) SECTION 2 (i) (c) - HINDU MARRIAGE ACT 1955.
(6) A.I.R. 1925 MADRAS 497 (D.B.)
(7) A.I.R 1933 LAHORE 585.
(8) "சாதியை ஒழிக்க வழி", - டாக்டர் அம்பேத்கார். பக். 45, 46. (பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு - 1977)
(9) "பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்" - தொகுதி. 3. பக். 1387 - 1388 (சிந்தனையாளர் கழகம், திருச்சி - 1974
(10) "தெய்வத்தின் குரல்" முதற்பகுதி பக். 266 - 267.
(11) "பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள்" நோட் 9. பக். 1712 - 1713 (சாரம்)
(12) "திராவிட முன்னேற்றக் கழகச் சட்ட திட்டங்கள்" விதி 2. (தலைமை நிலைய வெளியீடு)

அறிவிப்பால் அறிவுத் தடுமாற்றமெய்திக் குழம்பிய நிலையில் உள்ளம் கசிந்து குருதிக் கண்ணீர் வடிக்கின்றோம். தங்களின் 25 ஆண்டு காலத் தொண்டு விழலுக் கிறைத்த நீராக ஒருபோதும் ஆகாது. தங்களின் தொண்டியக்கத்தில் சில மாறுதல்களைச்செய்ய வேண்டிய கட்டாயம் இப்போது எழுந்ததற்கான காரணியங்கள் யாவை?

'தமிழ்நில' விளைச்சலுக்காக - அதன் அறுவடைப் பயனுக்காக அங்காங்குக் காத்திருக்கும் ஏழை எளியவர்கள் எத்தகையோர்? அவர்களின் ஏமாறிய இளித்தவாய்த் தனத்தாலன்றோ இற்றைத் தமிழக அரசியல் கலைக் கோமாளிகளின் கரவும் கையூட்டும் மலிந்த கைகளில் சிக்கிச் சீரழிகிறது. அவர்களைத் திருத்த முற்பட, வேறு வழிமுறைகளை ஆய்ந்து செயல் படுத்துங்கள்.

'தென்மொழி' வாயிலாகத்தான் தங்களை இவ்வுலகம் விளங்கிக் கொண்டது. தங்களின் தலைமையை உண்மைத் தமிழன்பர்கள் உறுதியோடும் உவகையோடும் ஏற்றுள்ளனர்.

ஆதலின் அன்பு கனிந்து தங்களின் முடிவை மாற்றிக் கொள்ளுங்கள். மீண்டும் இலக்கியவானில் ஒப்பற்ற முழு மதியாய்த் தென்மொழியை உலாவரச் செய்யுங்கள், நாளைய வரலாற்றில் தங்களுக்கென்று தனித்த ஓர் இடம் உள்ளது. தடம் மாறவோ தடுமாறவோ இது நேரமன்று. தங்களின் செம்மாந்த தமிழ்த் தொண்டு என்றும் உயர்க; ஓங்குக.

தங்கள் உண்மையுள்ள

— கடலூர் ப. மணிமாறன். கிருட்டிணராயபுரம்,திருச்சி

## 50 : நீங்கள் எழுதியதை நினைத்துப் பாருங்கள்!

அன்புசால் ஐயா, வணக்கம்

'என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள், (தென்மொழி சுவடி கக ஓலை ரு) என்ற தங்களது ஆசிரிய உரையினைப் படித்து அதிர்ச்சியடைந்தேன். எப்படியோ தெளிந்து இதை எழுதுகிறேன்.

'தி.பி. 2000 ஆண்டு நினைவுக்குறிப்புகளை'யும் 'தென்மொழி நலமில்லை நீங்கள் நலமா? (ஒரு விளக்கம்,' இரண்டையும் திரும்ப நினைவு படுத்திப்பாருங்கள்.

"தென்மொழி எதைக் கொள்கையாகக் கொண்டதோ அந்தக் கொள்கைக்குத் துளியும் மாறின்றி மறுவின்றி அதன் போக்கும் அன்றும் இன்றும் அமைந்துள்ளது. இனியும் நான் உள்ளவரை அப்படியே அமையும். என்னால் செய்ய முடிந்ததை செய்து கொண்டே சாவேன். இயன்றவரை கட்டாயம் செய்வேன். எனவே கவலைப்படாதீர்கள். தென்மொழி நிற்காது. அவ்வப் பொழுதுள்ள நிலைமைகளுக்குத்தக முன்னும் பின்னும் வந்து கொண்டு

தானிருக்கும். அவ்வளவுதான். என் வெயர்வையால் விளக்கும் வேளாண்மை; முடிந்தால் பயன் படுத்திக் கொள்ளுங்கள்.''

(தென்மொழி சுவடி எ. ஓலை.ச)

''கொண்ட கொள்கையும் வலிது, கொள்கை நடக்கின்ற வழியும் புதிது, துணையும் சிறிது; இருப்பினும் இறக்கத் துணிந் தார்க்குக் கடல்நீர் இடுப்பளவு எனும்படி உயிரைப் பணயம் வைத்தாகிலும் எடுத்த வினையை முடிப்பதே நம் வாழ்க்கையென எண்ணிக் கொஞ்சமும் அஞ்சாது நடையிடத் தொடங்கியுள்ளோம்.''

('தென்மொழி சுவடி.உ.ஓலை.க.)

முதல்வர் நீங்கள், தென்மொழி தொடர்ந்து பணியாற்ற முடிவு செய்வீர்கள் என்று நம்பும்

மறைமணாளன், செயலர் உ.த.மு.க கீழைக்கரை (கிளை)

## 51 : தனித்தமிழ் உணர்வை மட்டுமா, பொதுமை உணர்வையும் ஊட்டி வந்ததே!

பாவலரேறு ஐயா,

வணக்கம். 'என் தொண்டியக்தில் சில மாறுதல்கள்' எனும் தங்கள் ஆசிரிய உரைகள் மூலம் தங்கள் உணர்வுகளைத் தெளிவான சிந்தனையுள்ள தென்மொழி அன்பர்கள் அனைவருமே உணர்ந்து கொள்வர். எனினும் என் போலும் தமிழ் நெஞ்சங்கள், தென்மொழி, தமிழ்ச் சிட்டு இதழ்களின் நிறுத்தத்தை ஒப்புக் கொள்ளார். தங்கள் மீதுள்ள அன்பின் சரிமையால் இதை வேண்டுகிறோம்.

தென்மொழி தனித்தமிழ் உணர்வை மட்டும் ஊட்டவில்லை; ஏழை எளியவர்க்கு இரங்கும் பொதுமை உணர்வையும் ஊட்டியே வந்திருக்கின்றது. தாங்கள் எதிர்பார்க்குமளவிற்கு அது தென் மொழி அன்பர்களிடம் நல்ல விளைவுகளை ஏற்படுத்தவில்லையென்றால், அது தங்கள் தவறோ, தென்மொழியின் தவறோ அன்று. தந்நலச் சுரண்டல்காரர்கள் தென்மொழியால் மட்டுமன்று. எல்லாவற்றாலும் பயன் பெறுவர். உ.த.மு.க-விலும் அத்தகையவர்கள் இருப்பர் என்பதைக் காலம் காட்டும். வேறு எவரும் செய்வதற்கு அரிய செயல்; தங்கள் ஒருவரால்தான் நிறைவேறும் எனும் ஒன்றே தென்மொழியைத் தொடர்ந்து வெளியிட வேண்டும் என்பதற்குப் போதுமான கரணியமாகும். இதற்காகத் தங்கள் உடலும், அறிவும் மேலும் உருகட்டும். இஃது ஈகமென்றால், தாங்கள் ஈக வரலாறு படையுங்கள் என இறைஞ்சுகிறோம்.

கட்சி வேறுபாடின்றித் தமிழ் நெஞ்சங்கள் தென்மொழியைப் பயின்று வருகின்றன. 'தமிழ்நிலம்' எத்தகைய பொதுமைப் பண்பைக் கொண்டிருந்தாலும், அதற்கு அரசியல் வண்ணமே பூசப்பெறும்.

அம்புலிமாமா, கோகுலம் போலும் பிஞ்சு நெஞ்சங்களில் இன அழிவு, மூடநம்பிக்கை நஞ்சை விதைக்கும் இதழ்களினின்றும் முற்றிலும் மாறுபட்டுத் தமிழ் உணர்வையும், மற்ற உயர்நெறிகளையும் வளர்க்கும் தமிழ்ச்சிட்டு சிறகொடிய வேண்டுமா? தாங்கள் எண்ணித் துணிபவர்கள். எனவே முடிவு தங்கள் கையில்!

அன்பன். — **கோ. மணிவேலன். குறிஞ்சிப்பாடி.**

## 52 : தொடர்க தென்மொழித் தொண்டு!

பார்ப்ப னர்க்குப் பால் சோறு
படைத்த தைப்போல் அய்யாவும்
தேர்ந்த முடிவாய்த் தென்மொழியைத்
திடுமென் றேனோ நிறுத்திவிட்டார்!
தூர்த்துப் பகையைப் புறங்காணத்
துளிர்க்க வேண்டும் எனவிழைந்தோம்:
சேர்த்து மகிழ்ச்சி மீண்டுயிர்த்துச்
செழிக்கக் கண்டோம் வாழியவே!

கற்று நிமிர்ந்தோர் மிக வருந்தக்
கடமை தன்னில் மனஞ் சோர்ந்தே
எற்றுக் கிந்த முடிவினையும்
எடுத்தார் அய்யா எனக் கவன்றோம்!
பற்றுக் கோடாய்த் தென்மொழியின்
பயனுந் தொடரக் கண்டுவந்தோம்!
வெற்றி நமதே அட்டியில்லை
விரைக ஏட்டுப் பணிதொடர்க!

ஆக்கம் விளைத்துத் தென்மொழியே
ஆன்ற பயனை விளைத்துரிமை
நீக்க மறவே நிலத் தொலித்து
நிமிர வைத்த தெம்மை,இனங்
காக்க ஆர்த்துக் களம் புகுந்தார்
கைவா ளாகத் திகழ்ந்தஇதழ்
தேக்க மின்றி வெளிவந்து
தீரம் விளைக்க வேண்டுகிறோம்

வெல்லும் தூய தமிழ்மொழியை
விழைந்து கற்று நிமிர்கையிலே
பொல்லார் வாய்க்குப் பொங்கலெனப்
பொக்கென் றிதழை நிறுத்தாமல்
நில்லா தேட்டுப் பணியென்றே
நிமிரக் கண்டோம், தென்மொழியும்
இல்லா தேது மேன்மையுமே?
இல்லை ஏட்டுப் பணிதொடர்க!

இன்னணம் க. குமரநடவரச ஈவப்பனார், உ. தமிழ்க்குமரன்,

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் நலம் பொதுமை உணர்வு கொண்ட ஊர் இன்று கெட்டழிந்து கொண்டுள்ளது'' என்று 'எங்களூர் மணிமுத்து அவர்கள் உரையில் குறிப்பிட்டார். மீண்டும் அறிவுநலஞ் சிறந்த அமரர் பூண்டியில் தாங்கள் ஆற்றிய உரை வழிவகை செய்யும் என நம்புகிறேன்.

பழநியில் தங்கள் உரைகேட்ட திரு. சண்முகசுந்தரம் அவர்கள் (திவிரப் பொதுவுடைமையாளர்கள் செயலால் சிறையேகியவரும் சிறந்த முற்போக்குச் சிந்தனையாளருமாவார்.) ''பெருஞ்சித்திரனர் ஒரு வரலாற்று நாயகன்'' என்றும்; நல்லோரைக் காண்பதுவும் நன்றே...!'' என்றும் கூறி மகிழ்ந்ததோடன்றி மறுமுறை வாய்ப்பு நேர்ந்தால் தம் குழந்தைகளையும் அழைத்துப் பேச்சைக் கேட்க வழி செய்வேன் என்றும் குறிப்பிட்டார்.

பழநியில் உரையின்போது 'தமிழன் வாழ்ந்தமுறை கூறி இன்று தாழ்ந்த வகை கூறும்போது மனம் கண்ணீர் சிந்தவில்லை. குருதி கொட்டியது. ஆசிரியர்; புலவர். சேயிளங்கண்ணன், மணிமுத்து போன்றவர்களால் அமரர் பூண்டியில் வழி நடத்திய உ.த. மு.க. செயற்பாட்டிற்குப்பின் புதியதொரு பரபரப்பான எழுச்சியைக் கண்டுள்ளது அமரர் பூண்டி என்றால் அது மிகையன்று. தங்களுரை செய்த பாங்கு ஊரெல்லாம் இதே பேச்சுத்தான். இஃது உண்மை.

— சிவமணி. அமரர் பூண்டி

0: 982: அன்புமிகு தமிழ்ப் பெருங்கடல், ஐயா அவர்கட்கு வணக்கம்.

ஐயா! யான் மெத்தப் படித்தவனுமல்லன்; தமிழ்ப் புலவருமல்லன். ஆனால், மனு நீதியால்-சாத்திரத்தால்-வருணச்சிரத்தால் நாலாந்தர மாந்த சாதி(இனம்)ஒன்று குமுகாய அமைப்பில்உள்ளது என்கிறார்களே அதனைச்சார்ந்தவன். அவர்களின் எண்ணப்படி என் எண்ணம் அஃது அன்று. தென்மொழியைத் தொடர்ந்து படித்து வந்தவர்களில் யானும் ஒருவன். ஆனால் இன்றுள்ள நிலையில் தென்மொழி தொடர்ந்து வெளியிட இயலாமைகண்டு-அறிந்து நெஞ்சம் கனலாய்த் தகைக்கிறது.

''நம் நாட்டின் அடித்தள மக்களின் முடிவுதான் என்ன? அவர்களின் முன்னேற்றம்தான் எது? அவர்கள் எதனால் இன்னமும் முன்னேறாமல் இருக்கிறார்கள்? எல்லாக் கட்சித் தலைவர்களும் அவ் வடித்தள மக்கள் முன்னேறாமைக்குக் காட்டும் காரணங்கள் சரிதாமா? அவர்களுக்காக தம் தலைவர்கள் உண்மையாக உழைக்கிறார்களா? இல்லை, தங்களுக்காக உழைத்துக்கொள்கிறார்களா? இவற்றைப்பற்றி எல்லாம் கொஞ்சம் மனம்விட்டுச் சிந்தித்தாக வேண்டும்.''

சிந்தனை தடைப்படுமோ என்று அஞ்சுகிறேன். படாது படவும் கூடாது. இஃது என் அன்பு வேண்டுகோள்.

"இச்சிந்தனைக்கும் திறனாய்வுக்கும் தென்மொழி களனாக முடியுமா?"—முடியும்.

"அந்தக்களம் மற்றவர்கள்வந்து கலந்து தங்கள் மனக் கருத்துகளைத் தெரிவிப்பதற்கும் செயல்பாடுகளைத் தொடங்குவதற்கும்—தொடர்வதற்கும் அல்லது போராடுவதற்கும் உரிய நிலைகளை வகுத்துக் கொடுக்குமா?" உண்மையில் வழிவகைகள் உண்டு. பணி தொடர வேண்டுகிறேன்.

சிந்தனையைச் செயல் வடிவமாக்குங்கள்: என்னைப் போன்ற அடித்தளத்திலுள்ள மக்களின் ஆதரவு என்றும் உண்டு. தென்மொழியைத் தொடர்ந்து வெளியிட ஆய்வு செய்யும்படி வேண்டிக்கொள்கிறேன்.

இவண் உங்கள் உண்மையுள்ள, ஆ. இரத்தினம் அகரம், சென்னை-82

*0: 983:* ஐயா, வணக்கம்: 'தென்மொழி' வளர்ந்து 'தமிழ்நில' மாகியுள்ளது, தமிழ்நிலம் வளர்ந்து ஒரு நாளிதழ் பிறக்கும் நாள் விரைவில் வரவுள்ளது. தமிழ் மக்களுக்குச் செய்தியை எடுத்துச்செல்ல வலிவு மிக்கதாக இன்றைய நிலையில் அமைவது ஒரே ஓர் இதழாகத்தான் அமையவேண்டும்.

தெளிவும் வலிவும் மிக்க கருத்துகள் வடிகட்டப்பட்டுப் பதிப்பிக்கப்பெறவேண்டும். இரண்டு இதழ்கள் நடத்தப்படும்போது இப்பணி தாக்கப்பெறும். அன்றி, இரண்டு இதழ்களும் வெவ்வேறு நோக்குடையவை என்றால் இரண்டையுமே நடத்தலாம். (சில கிழமையிதழ்கள், திரையுலகு பற்றிய செய்திகளுக்காகத் தனியிதழ்கள் நடத்துவதை எடுத்துக்காட்ட விழைகிறேன்) ஆனால் இரண்டுமே ஒரே நோக்குடையவையென்றால், ஒன்றுக்கொன்று சார்புடையவை என்றால் இரண்டு இதழ்களாக ஏன் அவை நடத்தப்பெற வேண்டும்?

புதியவர்களிடம் அறிமுகப் படுத்தும்போது இரண்டு இதழ்களையும் வாங்குமாறு எப்படிக் கோர இயலும்? அவர்கள் ஒரே ஓர் இதழ் மட்டும் வாங்க முன்வரும்போது அனைத்துக் கருத்துகளும் எவ்வாறு அவர்களைச் சென்றடையும்? "நுகர்வோர்"களுடைய நோக்கிலிருந்தே இவற்றை நாம் காணவேண்டும்.

எனவே, 'தென்மொழி'யை ஆண்டு இதழாக்கி ஆராய்ச்சிக் கட்டுரைகள்கொண்ட பொத்தகமாக வெளியிடலாம், அப்போது அதனை நிறுத்திவிட்டோமென்ற வருத்தமிராது. 'தமிழ்நிலத்'தை மேலும் விரிவு செய்து கடுமையான தரக்கட்டுப்பாட்டுடன் வெளியிட்டால் அது நன்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும். அதுதானே நம் இலக்கு. (தமிழ் அன்பர்களின் கட்டுரைகள், மடல்கள் ஆகியவற்றை அப்படியே முழுமையாகப் பதிப்பிக்காமல் தேவையான பகுதிகளைமட்டும், வெட்டுதல் ஒட்டுதல்களுடன் பதிப்பதைத் தான் தரக்கட்டுப்பாடு என்று நான் குறிப்பிடுகிறேன்.

— இராச. கூத்தன் பழநி,

# தண்டமிழ்த் தொண்டர் தமிழ் நிலவனார் வாழ்க!

-பாவலரேறு-

அமைதியான அன்பு தவழும் முகம்! புன்னகை அவிழும் இதழ்! பொலிவு மிகும் தூய வெள்ளை உடை! மென்மையான உரை! தூய தமிழ்! — இத்தனைச் சிறப்புக்கும் இலக்கானவர், தஞ்சைத் தமிழ் மண்ணில் வாழ்கின்ற தமிழ் நிலவனார் அவர்கள்.

நாம் தஞ்சை செல்லும் பொழுதெல்லாம் தவறாமல் வந்திருந்து நம்மைக் கண்டு, அமைவாக இனிய பண்புடன் நலங் கேட்டு உரையாடி, தொண்டுச் சுமையால் துவண்டு போகும் எம் நெஞ்சை அவ்வப்பொழுது குளிர்விக்கும் அவர் பாங்கு, நினைக்குந் தொறும் மகிழ்வளிக்கும் பெருந்தகைமை சான்றது.

அவருக்குக் கடந்த மடங்கல் மாதம், 19-ஆம் பக்கல் (4-9-83) ஞாயிறன்று, திருவாரூர், இயற்றமிழ்ப் பயிற்றகத்தார், முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திருக்குறள் வீ. முனுசாமி ஆகியோர் முன்னிலையிலும், சேலம் புலவர் திரு. மி. மு. சின்னாண்டார் தலைமையிலும் கொண்டாடிய 'திரு. வி. க. நூற்றாண்டு விழா'வின் பொழுது, இவரின் தாழாத ஒண்டமிழ்த் தொண்டைப் பாராட்டும் வகையில், பயிற்றக இலக்கணப் புலவர் உயர்திரு. த. ச. தமிழனார், 'தண்டமிழ்த் தொண்டர்' என்னும் சீரிய நேரிய பட்டம் தந்து பாராட்டினர்.

திரு! தமிழ் நிலவனார் அவர்கள் தி.பி.1951, விடைத் திங்கள் 25-ஆம் பக்கல் (7-6-1920) தஞ்சையில், திருவாளர்கள் அ. குப்புசாமியார், பக்கிரியம்மையார் ஆகிய பெருமக்கட்குப் பிறந்தவராவர். சேதுராமலிங்கம் என்ற தம் இயற் பெயரைத் தமிழ் நிலவன் என்று மாற்றிக் கொண்டார். துணைவியார் தாமரையம்மையார். சிறு அகவையிலிருந்தே நல்ல தமிழ்ப் பற்றும் தொண்டுள்ளமும் கொண்டு விளங்கிய அவர், தஞ்சை, தொல்காப்பியர் கழகத்திலும், தமிழர் பேரவையிலும் பொறுப்புகள் ஏற்றுத் தமிழ்ப் பணி புரிந்து வருகிறார். கூட்டுறவுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற இவருக்குப், புகழேந்தி, திருமாவளவன் எனும் இரண்டு ஆண்மக்கள், 'இவன் தந்தை என்னோற்றான் கொல்' எனும் சொல்லுக்கு உகந்தவராக இருந்து வருகின்றனர்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

(சுருக்க மதிப்புரைக்கு நூலின் இரண்டுபடிகளும்,
விரிவான மதிப்புரைக்கு ஐந்து படிகளும்
அனுப்ப வேண்டும்.)

1. **தீக்குச்சிகள்** *(உரை வீச்சு)*

ஆசிரியர்கள் : தொ. சா. ரா; வ. கோ. ரா.
வெளியீடு : அறிவன் பதிப்பகம் 38, தேரடித்தெரு, சென்னை-5.
பக்கம் : 72; விலை: உரு 5.

43 உரை வீச்சுகள் அடங்கியநூல். பொதுவுடைமை மலர்ச்சிக்குகந்த கருத்துகள். உரைத் தெறிப்புகள் சிந்தனையைத் தூண்டுகின்றன.

2. **மாணவர் சிந்தனைக்கு**

(அண்ணல் பு. அ. சுப்பிரமணியனாரின் கருத்துரைகள்)
தொகுப்பாசிரியர், மருத்துவர். வி.கே.இராமச்சந்திரன் மரு.மு.
வெளியீடு : வள்ளுவர் பதிப்பகம். புதுக்கோட்டை-1.
பக்கம்: 114; விலை: உரு 6.

புதுக்கோட்டை, திருக்குறள் கழகத்தலைவர் அண்ணல் பு.அ. சுப்பிரமணியனார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளிலிருந்தும், உரையாடல்களிலிருந்தும் திரட்டப்பெற்ற அரிய கருத்துமணிகள். மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பெரிதும் பயன்படக்கூடிய கருத்துக் கட்டுரைகள், பதினொரு தலைப்புகளில் தொகுத்துத் தரப் பெற்றுள்ளன. பயனுள்ள வெளியீடு.

3. **தமிழ இனமே** *(பாடல்கள்.)*

ஆசிரியர் : தமிழ்ப் பாவலன். தரங்கை-பன்னீர்ச் செல்வன்
வெளியீடு: கயற்கண்ணி பதிப்பகம். முதனை அஞ்.
வழி ஊமங்கலம் 607804. தெ. ஆ. மா. வ.
பக்கம் : 18 விலை: உரு. ஒன்று.

---

*(முன் பக்கத் தொடர்ச்சி)*

இவர் நீண்ட நெடிய வாணாள் வாய்க்கப் பெற்று, எல்லா நலன்களும் வளன்களும் வந்து பொருந்த, மேலும் பலவகையில் எந்தமிழ்க்கும் இனத்துக்கும் நாட்டுக்கும் இனிய தொண்டாற்றிச் சீரும் சிறப்பும் பேரும் புகழும், அரும் நிறைவு வாழ்வு வாழ்ந்து சிறக்க, நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகின்றோம்.

*'தண்டமிழ்த் தொண்டர்' தமிழ் நிலவனார் வாழ்க!*

நூலாசிரியரின் 29 பாடல்கள் அடங்கிய நூல். தூய தமிழ் இயக்கப் பாவலர் எழுதிய தூயதமிழ்ப் பாடல்கள் இவை அரிய கருத்துகள்; யாப்பு வழுவா இனிய பாடல்கள்.

தாயகம் மீட்டிடத் தலைகொடுப்பேன் — என்றன்
தமிழினங் காத்திட விலைகொடுப்பேன் — உயிர் விலைகொடுப்பேன்!
— என்று ஒரு பாடல் தொடங்குகிறது!

விடுதலைப் பொழுது புலராதோ?
வெற்றித் திருமலர் அலராதோ?
நெடுதுயில் தமிழம் விடியாதோ?
நிறைதுயர் அடிமை அழியாதோ?

என்று பாவலர் விடும் எக்கப்பெருமூச்சுகள் எதிர்காலத் தமிழக மலர்ச்சிக்குத் துணைபோகக் கூடியவை. 'தென்மொழி' யால் அறிமுகப்படுத்தப்பட்ட பாவலர், காலச்சூட்டால் கருகி வருவது வருந்தத் தக்கது! கொள்கைத் தொய்வு இல்லாமற் போயினும், குழுமாற்றத்தால் தொய்வு கண்டவர். முறைப்படின் நிறைப்படுவர். பாடல்கள் சிறந்தவை! நிறைந்தவை!

4. ஐந்தடித் தமிழர்கள்

ஆசிரியர்: மாசி. அண்ணாமலை, மலேசியா.
வெளியீடு: தமிழ் இலக்கியக் கழகம்.
110, சாலான் பங்காவ், தாமன் பெர்கிலி
கிள்ளான், சிலாங்கூர், மலேசியா.
பக்கம்: 92; விலை 3 மலேசியா வெள்ளி.

தமிழர்கள் மலேசியாவில் எவ்வாறு குடியேறினார்கள், அங்கிருந்து குடியேற்ற ஆட்சிமுறைகளால் என்னென்ன வகையில் துன்பமுற்றார்கள், அவர்கள் பட்ட துயரங்கள், கொடுமைகள், அவர்கள் அந்நாட்டு முதலாளிகளாலும் அரசாலும் சுரண்டப்பட்ட தன்மைகள், அந்நாடு வளப்படுத்தப்பட்ட நிலையில் அரும்பாடுகள் முதலியவற்றைக் காட்சி வடிவில் கொதிப்பான சொற்களால் தந்திருக்கிறார் ஆசிரியர். 'மலேசியாவிலிருந்து மலேசியத் தமிழர்களைப் பற்றி வெளிவரும் முதல் வரலாற்று நூல் இது' என்று, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் திரு. இர. ந. வீரப்பன் அவர்கள் கூறியுள்ளது ஒப்பத்தக்கது. ஆசிரியர் திரு. மாசி அண்ணாமலை சிறந்த குமுகாயத் தொண்டர்; அரசியல் தலைவர்; தொழிலியக்க ஆதரவாளர்; மக்கள் உழைப்பாளர், அனைத்துக்கும் மேலாக உண்மையான, நேர்மையான, துவளாத துணிவான பொதுவாழ்வினர். அயல்நாட்டில் வாழும் தமிழர்களைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டிய பொதுவுணர்வினர் அனைவரும் வாங்கிப் படித்துப் பாதுகாக்க வேண்டிய நூல் இது.

5. **தனித்தமிழ் பேணுமின்**

ஆசிரியர் : மு. திருவேங்கடம்.
வெளியீடு : MU. Thiruvengadam, 19. Jalan Abdullah, Panchur Muar, Johore. Malaysia).
பக்கம் : 108; விலை 3 மலேசிய வெள்ளி

நெடுநாளைய 'தென்மொழி' அன்பரும், தனித்தமிழ் இயக்கத் தொண்டரும், தீவிர இனநலக் கொள்கையாளரும் ஆகிய இளைஞர் பஞ்சூர் மு திருவேங்கடத்தின் அரிய சிறந்த கட்டுரை நூல் இது. அவரின் தணியாத தூய தமிழ்ப்பற்றும் இனநல வேட்கையும் இந்நூலின் ஒவ்வொரு பக்கத்திலும் குமிழியிட்டு ஓடுகிறது. தமிழின முன்னேற்றத்தின் மேலும்; தமிழ்மொழியின் மீதும் அவர் கொண்ட ஆராப்பற்று- வெறி மிகவும் பாராட்டி மதித்துப் போற்றத்தக்கது! துடிப்பான அவரின் உரைநடையில் எதிர்காலத் தமிழக விடியலைப் புலப்படுத்துகிறார். தூயதமிழ் நடையில் அழகாகவும் சிறப்பாகவும் எழுதப்பெற்ற இந்நூல் உலகத்தமிழரின் விழிப்பை உறுதிப்படுத்துகிறது. நூலாசிரியர்க்கு எம் மனம் நிறைந்த பாராட்டுகள்.

T. 5844

பாவலரேறு அவர்கள் நூலுக்குச் சிறப்புரை வழங்கியுள்ளார்கள். அதில் தனித்தமிழ் வளர்ச்சிக்கு இந்நூல் மிகவும் துணையாக நிற்பது' என்று பாராட்டியுள்ளார்கள். மற்றும் மலேசிய திராவிடர் கழகத்தலைவர் திருச்சு. கா. இரா. இராமசாமி அவர்களின் அணிந்துரையும், சிங்கைத் தென்மொழிப் பாவலர் முல்லைவாணன் அவர்களின் அறிமுகப் பாவும் அட்டைகளை அணி செய்து நூலுக்கு அரண் செய்கின்றன.

தனித்தமிழ், தன்மானம், பகுத்தறிவு-ஆகிய மூன்று கொள்கைகளையும் மூவரணாகக் கொண்ட 'தென்மொழி' மு. திருவேங்கடம் அவர்களின் முயற்சி வெல்க என்று வாழ்த்துகிறோம்.

6. **பாரதியின் புலமை நலம்.**

பதிப்பாசிரியர் : பேரா. பா. வளன்அரசு, க.மு.
தலைவர் தனித்தமிழ் இலக்கியக் கழகம் பாளையங்கோட்டை, 627002.
பக்கம் : 135, விலை : உரு. எட்டு.

பாரதியார் ஒரு தகுபுலவர் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் 'அரசன் மூத்தினால் அரம்பை' !அரசன் வீட்டுக் கோழிமுட்டை அம்மிக் கல்லையும் உடைக்கும்! என்னும் பழமொழிகளுக்கு ஏற்ப, தேசியம் படி, ஆரியப் பெருமைக்கு வீறு சேர்த்து, வடமொழி மேலாண்மையை வலியுறுத்தியதால், ஆரியப் பார்ப்பனரானும் அரசாலும் அளவிறந்து

'மகாகவி' என்றும் 'தேசியக்கவி' என்றும் புகழவும் விளம்பரப் படுத்தவும் படுகிறார். செல்வனாக இருப்பதால் மட்டும் எப்படி ஒருவன் அறிவாளியாகி விடமாட்டானோ அப்படி, அரசியலாரைச் சார்ந்து, ஆரியத்தைச் சார்ந்து எழுதிவிட்டால் மட்டும் 'மகாகவி' யாகிவிட மாட்டான். ஆனால் இந்த நாட்டில்தான் வேண்டாத 'மலை'யை 'மண்ணாங்கட்டி'யாகவும், வேண்டிய 'மண்ணாங்கட்டி'யை 'மலை'யாகவும், அறிவில் வருணாச்சிரமத்தையும் முதலாளியத்தை யும் புகுத்தும் ஏக்கழுத்தம் இருகக முடியும். எனவே பாரதி நூற்றாண்டென்று கொண்டாடவும், பாரதியைப் பற்றிப் பன்னூற் றுக் கணக்கில் நூல்கள் எழுதவும் செய்கிறோம். ஒரு 'குயில் பாட்டும்', ஒரு 'பாஞ்சாலி சபதமும்' ஒரு 'மகாகவி'யை உருவாக்கு மானால், ஒரு 'குடும்பவிளக்கும்', ஒரு 'பாண்டியன் பரிசு'ம் ஓர் 'அழகின் சிரிப்பும்', ஒரு 'தமிழியக்கமும்', 'எத்தனை பெரிய மகா கவியை உருவாக்கியிருக்க வேண்டும். ஆரியத்துக்கும் திராவிடத் துக்கும் ஒரு பிராமணப் பிறவிக்கும் ஒரு சூத்திரப் பிறவிக்கும் இங்கு காட்டும் வேறுபாடு இதுதான். 'பாப்பான் மலமும் மணக்கும்' எனும் பிறவி வெறி, வருண ஆசிரமத் தீநாற்றம் இங்குதான் வீச முடியும். எனவேதான் பாரதியைப் பற்றி இத்தனை நூல்கள்! அவரை அளவுக்கு மீறி சேக்சுபியர் ஆக்கிக் காட்டு கிறார்கள். இதில் தமிழர்களும் சேர்ந்து கொள்கிறார்களே என்பது தான் நம் வருத்தம்!

ஒன்றால் மூடநம்பிக்கைக்கும் ஆரிய அடிமைத்தனத்திற்கும் துணைபோன 'கம்ப'சூத்திரனைப் பிடித்துக் கொள்கிறார்கள். அன்றால் ஆரியத்தையே பிடித்துக் கம்பனுக்கும் மேலாகக் காட்டி, வீடணப் பிரகலாதன்களாகி விடுகிறார்கள். எந்த வண்டியில் ஏறினால் 'தேசிய பாரதத்தை' வலம் வர முடியுமோ, அந்த வண்டியில் அடித்துப் பிடித்தேனும் ஏறி, பார்ப்பனக் கழிவறையிலேனும் கதவைத் திறந்து கொண்டு அமர்ந்து கொண்டால் சரி என்று. நம் 'தன்மானம்' காக்கவேண்டிய பேராசிரியர்களும் 'தனிமானம்' காத்துக் கொள்கிறார்கள்.

நம்முடைய கருத்து இதுதான். இன்னும் ஓர் அரை நூற் றாண்டுக்கேனும்' நம் திருக்குறளைப் பற்றியும், பாவேந்தரைப் பற்றியும், பாவாணரைப் பற்றியும், மறைமலையடிகளைப்பற்றியும், திரு. வி. க. வைப் பற்றியும், இன்னும் நம் மொழி, இன,நல மீட்பாளர்களைப் பற்றியும் அவர்களுடைய முயற்சிகளைப் பற்றி யுமே நூல்கள் எழுதிப் பரப்ப வேண்டும்; மேடைகள் தோறும் முழங்க வேண்டும். பார்ப்பனர்கள் -பக்கம் அவர்களின் இலக்கி யங்கள் எழுத்துகள், கதைகள், காமக் கழிசடைகள் பக்கம் திரும்பவும் கூடாது; போதும் நாம் அடிமைப்பட்டது; எத்தனை வருக் கத்து கத்தினாலும், அவர்கள் நம் பக்கம் திரும்புகிறார் களா? அவ்வளவு கட்டுப்பாடு; இறுகல் தன்மை. நாம் மட்டும் எத்தனைக் காலத்திற்கு இளித்த வாயர்களாகப் போவது. நாங்

# இது நடந்திருக்கக் கூடாது!
# ஆனால் நடந்து விட்டது!
# என்ன செய்வது? காலம் அப்படி!

— பெருஞ்சித்திரனார்.

கடந்த 1-12-83-ஆம் நாள் பிற்பகல் 3 மணி இருக்கும். நான் பகல் உணவு எடுக்க நேரமின்றித் தொடர்ந்து எழுதிக் கொண்டிருந்தேன்! சிறிது நேரத்தில் பணியை ஒருவாறு முடித்துக் கொண்டு உணவுக்கு என எழுந்து போக விருந்த நேரத்தில், என் அறைக்குள் இருவர் வந்தனர்.

வந்தவருள் ஒருவர் எனக்கு முன்பே அறிமுகமாயிருந்த காவல் துறை அதிகாரி. சென்னை, காவலர் கல்லூரியின் ஆய்வாளர்களைப் பயிற்றும் ஆசிரியராக உள்ளவர். இன்னொருவர் அவருக்கு

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாரதியார்களைப் பற்றி நூல் எழுதுகிற அளவுக்கு வேண்டாம், எங்கேனும் ஒரு நூல் பாரதிதாசனைப் பற்றி அவன்களுள் ஒருவன் நூல் எழுதியிருக்கின்றானா? எவரேனும் சொல்ல முடியுமா? ஏன் இந்த இளித்த வாய்த்தனம்? ஏமாளித்தனம்? அதனால்தான் சொல்கிறோம், நம் இனம் முன்னேற வேண்டுமானால், இல்லை கால வெள்ளத்துள் முழுகிப்போகாமல் இருக்க வேண்டுமானால், குதிரைக்குக் கண்ணடக்கம் போடுவதைப்போல், ஓர் ஐம்பது ஆண்டுகளுக்காவது போட்டுக் கொண்டு, அவர்கள் இலக்கியங்கள் வரலாறுகள், வாலாட்டங்கள், வயிருட்டங்கள், முதலிய எந்த இழவானாலும் சரி என்று, திரும்பிப் பார்க்காமல், நம் தமிழ் மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் உகந்த தன்மைகளை, அவை உதவாக்கரைகளாக இருந்தாலும் சரி, உலக அரங்கிற்குக் கொண்டு வந்து நிறுத்தியாக வேண்டும் என்பதை இந்த நூலைப் பற்றிய மதிப்புரையில் முன்னுரையாகக் கூறிக் கொள்ள விரும்பு கிறோம்! நம் புலவர்களும் பேராசிரியர்களும் இதை நூறுமுறை படித்து நெஞ்சாங்குலையில் போட்டு நிலையாக வைத்துக் கொள் ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். மதிப்புரையில் இக் கொதிப்புரையை முன்னுரையாக எழுதி அதிர்ச்சியடைய வைத்த தற்கு, நம் அன்புக்கும் மதிப்பிற்கும் பாராட்டுதலுக்கும் உரிய பேராசிரியர் திரு. வளனரசு அவர்களைப் பொறுத்துக்கொள்ளும் படி வேண்டிக் கொள்கின்றோம்.

மற்றபடி, இந்நூலைப் பொறுத்த அளவில் இது பாரதி பித்தர்களுக்கு மிகவும் பயனுடைய, சிறப்புடைய ஒரு கட்டுரைத் தொகுப்பு நூல். பேரா. வளனரசு அவர்களின் மிகச் சிறந்த வரலாற்றுப் பதிப்புரையும், அறிஞர்கள் பன்னிருவர் பாரதி பற்றி எழுதிய பலகோண ஆய்வுக் கட்டுரைகளும் மிகவும் பாராட்டத்தக்கன. பயனுடையன. பாரதி அலை எம்பி வீசும் இக்கால கட்டத்தில், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பாடமாக வைப்பதற்கு ஏற்ற நூல் இது!

நண்பரான தமிழ்ப் புலவர். நெல்லை மாவட்டம் காயல் பட்டினத்தைச் சேர்ந்தவர். (பெருந்தன்மை கருதி அவர் பெயர் இங்கு வெளியிடப் பெறவில்லை) ஏதோ பணி காரணமாகச் சென்னைக்கு வந்தவர், என்னைப் பார்ப்பதற்கென்று நண்பருடன் வீட்டுக்கு வந்திருக்கிறார். அவர் தம்மைப் பெரியார் பற்றுளராகவும், திராவிடர் கழக ஆதரவாளராகவும் காட்டிக் கொண்டார்.

காவல் அதிகாரி நம் கருத்துகளில் ஈடுபாடு கொண்டவராகையால், நெடு நேரம் பல செய்திகளைப் பற்றிப் பேசியிருந்த பின்னர் தம்முடன் வந்திருந்த புலவரை என்னிடம் அறிமுகப் படுத்தி விட்டு, 'இவர் நல்ல பாவலர்; சிறந்த பாடல்களை எழுதியிருக்கிறார்'' என்று மகிழ்வொடு கூறி, அவரிடம், "ஐயாவிடம் சில பாடல்களைப் பாடிக் காட்டுங்கள்'' என்று அவரைக் கேட்டுக் கொண்டார்.

புலவர் ஐம்பத்தைந்து அகவை தாண்டியவர் என்றாலும் நல்ல உடல் நலத்துடனும் குரல் வளத்துடனும் இருந்தார். பழகுவதற்கு இனியவராகத் தென்பட்டார். நண்பர் கேட்டுக் கொண்டதும் நல்ல எடுப்பான குரலில், தெளிவான சொற் பலுக்கலுடனும் உணர்வுடனும், மிகவும் எழுச்சி பொங்க,

உடல்நரம்பில் தமிழ்க்குருதி ஓடாதார்
ஒதுங்குக; ஒருநாளில் மூவேளைக்கே
குடல்நிரப்பும் தொழிலொன்றே பெரிதென்னும்
கோழையர்கள் வழிவிடுக; மடியர் செல்க!
விடல்அரிதாம் அடிமை நலம் விரும்பிடுவார்
வெருண்டொதுங்கிக் கொள்க; தமிழ் மானங்காக்கும்
அடல்மறவர் வெங்களிற்றுக் கூட்டமென
அலைந்தெழுந்தார்; அவர்நடைக்குத் தடைசெய்யாமே!

— என்ற பாடலை மிக நன்றாக உரக்கப் பாடினர்; தேவையான இடங்களில் சொற்களைப் பொருளுடன் நிறுத்தி, எடுக்க வேண்டிய இடத்தில் எடுப்பாகவும், ஒடுக்க வேண்டிய இடத்தில் ஒடுக்கியும் பாடினர். மிகவும் மகிழ்வாக இருந்ததால், பசியாக இருந்த போதும் அமைதியாகவும் ஆர்வமாகவும் கேட்டுக் கொண்டிருந்தேன். பாடல் நான் எழுதியது; 'தென்மொழி'யில் (சுவடி 2; ஓலை 6-இல் 1964 சூலையில்) வெளிவந்த அட்டைப் பாடல்!

நான் பாடலை மிகவும் சுவைத்துக் கேட்டவுடன், மீண்டும் ஆர்வத்துடன் இன்னொரு பாடலைப் பாடினர். அது யார் எழுதியதென்று தெரியவில்லை. அடுத்து மூன்றாம் பாடலாகக் கீழ்வரும் பாடலையும் அதே எடுப்போடும் இனிமையோடும் பாடினர்.

ஆர்த்த முரசொடு கொம்பும் முழங்க
அருந்தமிழர்
சீர்த்தி விளங்க நெடுங்கொடி தூக்கிச்
செறுவிழிவேல்
கூர்த்த மறவர் களிற்றெடும் போந்தார்;
குலை நடுங்கிப்

போர்த்த இருளே, பகையே விலகுக
பொக்கெனவே!

இதுவும் 'தென்மொழி' (சுவடி 2; ஓலை 8 - 1964 செப்.) - இல் வெளி வந்த பாடலே! இதையும் மிகவும் சிறப்பாகவே பாடினார். எனக்கு அவர்மேல் கொண்ட பெருமையும் மதிப்பும் முன்னினும் பல மடங்கு உயர்ந்தது. உடனே அவரைக் கேட்டேன் :

"நீங்கள் எத்தனை ஆண்டுகளாகத் 'தென்மொழி' படித்து வருகிறீர்கள்?"

"தென்மொழி படித்ததில்லை; ஏதோ ஒன்றிரண்டு பார்த்திருக்கிறேன்; ஆனால் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அப்படியா? அவ்வாறானால் இந்தப் பாடல்களை எப்படிப் படித்தீர்கள்?"

"இவை முழுவதும் நான் எழுதிய பாடல்கள்!" மனம் கூசாமல் சொன்னார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். என்மேல் எனக்கே ஐயமாகப் போய் விட்டது. உறுதிப் படுத்திக் கொள்ளும் வகையில் மீண்டும் அவரைப் பார்த்துக் கேட்டேன் :

"இதோ, பாருங்கள்! இவற்றை நீங்களே எழுதினீர்களா? நன்றாக நினைவு படுத்திப் பார்த்துச் சொல்லுங்கள்! ஒருவேளை வேறு யாராவது எழுதிக் கொடுத்து, அவற்றை மனப்பாடம் பண்ணினீர்களா?"

"இல்லை; நானே தான் எழுதினேன்" — மிகவும் அழுத்தமாகச் சொன்னார்.

கொஞ்சம் குறிப்புக் காட்டும் வகையில், "இவை தென்மொழியில் வெளிவந்தவை" — என்றேன்.

"வேறு யாராவது நான் சொல்வதைக் கேட்டு எழுதிப் போட்டிருப்பார்கள்" — சற்றும் தயக்கமின்றிச் சொன்னார்.

என்னை யாரோ மண்டையில் அடித்தது போல் இருந்தது. கதி கலங்கிப் போனேன். நாங்கள் பேசிக் கொண்டிருந்தது கனவில்லை, காட்சி தான் என்று, மிசை மேல் உள்ள பொருள்களையும், பலகணி வழி ஊடுருவி வந்து கொண்டிருந்த பகல் ஒளியையும், நான் உணவருந்த வரவேண்டும் என்று நெடுநேரமாக நினைவூட்டி என்னை அழைத்தவாறு, உள்கதவோரமாக நின்று நாங்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த என் அன்னையார் முகத்தையும் பார்த்து, உறுதி செய்து கொண்டேன். மீண்டும் இரக்கமாகவும் வியப்பாகவும் புலவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். பின் அமைதியாக அவரிடம் சொன்னேன்,

"ஐயா, இவை நான் எழுதித் 'தென்மொழி'யில் அட்டையில் வந்தவை; நீங்கள் எழுதியனவாக எப்படிச் சொல்கிறீர்கள்"

— (இங்கு, 'நான் எழுதியவை' என்று குறிப்பிடுகையில் உள்ளத்தில் செருக்கில்லாத ஒரு நாண உணர்வு தோன்றியது. என் உள்ளத்தில் 'நான்' என்னும் உணர்வு என்றோ அழிந்து விட்டது. எதையும் 'நாம்', 'நம்முடையது' என்றே கூறிப் பழக்க மாகி விட்டது. தவிர்க்க முடியாத தேவை வரும் இடங்களில் மட்டும் (என் கை, என் மனைவி, நான் உறங்கப் போகிறேன் — போலும் இடங்கள்) அவ்வுணர்வு கலந்த சொற்கள் வரும்.)

"இல்லை; நானே தான் எழுதினேன்" — அடித்து, அழுத்த மாகச் சொன்னார்.

"ஐயா, நீங்கள் பாடியவற்றுள் இரண்டு பாடல்கள் நான் எழுதியவை. மற்றது யார் எழுதினார்களோ தெரியாது. நீங்கள் தாம் எழுதியிருப்பீர்களா என்ற ஐயமும் இப்பொழுது எனக்குத் தோன்றி விட்டது. எதிர் நிலையுள்ள இரண்டு உண்மைகள் எப்படி இருக்க முடியும். இவை நான் எழுதியவை என்றால் நீங்கள் எப்படி எழுதியிருக்க முடியும்? முடியவே முடியாது! உண்மையைச் சொல்லுங்கள்! வேறு யாரேனும் இவற்றை எழுதிக் கொடுத்து அவற்றை நீங்கள் மனப்பாடம் பண்ணினீர்களா?" என்று மிகவும் நயமாகவும் அன்பொழுகவும் ஆதரவாகவும் கேட்டேன்.

இப்பொழுது அவரைப் பார்க்க ஒரு வகையில் எனக்கு மிகவும் கழிவிரக்கமாகவும், இன்னொரு வகையில் வெட்கமாகவும் கூட இருந்தது. தனியறையில், பார்க்கக் கூடாத நிலையில் இருந்த ஒருவரைத் திடுமென உள்ளே நுழைந்த போது நாம் பார்க்க வெட்கமாயிருக்காதா? அது போல் இருந்தது எனக்கு. ஆனால், அவரோ, திருடிவிட்டு மறைக்கத் தெரியாத குழந்தையின் நிலையில் இருந்தார். பெரிய திறமையுள்ள புலவர் அவர். புலவர் பட்டத் தோடு இளம் இலக்கியவியல் பட்டத்தையும் அவர் பெற்றிருந்தார்.

திருடியவரிடமே திருட்டுப் பொருளின் பெருமை பேச வந்தவரைப் போலவும், பெற்ற தாயிடமே தெருவில் விளையாடிய குழந்தையைத் தூக்கி வந்து விலை பேசுகின்ற பிள்ளை திருடியைப் போலவும் ஆன ஓர் அறஇக்கட்டில் (தர்ம சங்கடத்தில்) அவர் சிக்கிக் கொண்டு, கண்களில் கண்ணீர் துளும்ப, தம்மை விட்டு விடும்படியான கோரிக்கை ஏக்கத்தில், என்னை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார். திருடி விட்ட எழுது கோலைத் தன்கோலே என்று வழக்காடும் ஒன்றும் வகுப்புப் பள்ளிப் பிள்ளையைப் போல அவர் எனக்குத் தென்பட்டார்.

ஒப்பவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் இருந்த அவரின் இக்கட்டான நிலையைக் கண்டு, "பாடல்கள் அவரெழுதியனவாகத் தாம் இருந்தால் என்ன, விட்டுக் கொடுத்து விடலாமா, நம் முடையவை என்பதால் இப்பொழுது நமக்கென்ன ஊதியம்; அவருடையவை என்றுதாம் அவர் மகிழ்ந்து விட்டுப் போகட்டுமே" என்று கூட எண்ணியது என் அறிவு!

தணிக்கவியலாத பிள்ளை ஆசையால், வேறு ஒருத்தி பெற்ற பிள்ளையைத் தன்பிள்ளை என்று அவளிடமே உரிமை பாராட்டும்

பேதைமலடி ஒருத்திக்கு, அந்த உரிமையைக் கொடுத்து உவக்கும் இன்பத்தை நாம் பெற்றுலென்ன?' — என்று அலை பாய்ந்தது என் நெஞ்சம்!

இப்படிப் பல முறைகள் என் வாழ்க்கையில் நேர்ந்துள்ளன. ஒரு முறை என் இனிய நண்பரும் பாவலரும் ஆன திரு. த. கோவேந்தன் அவர்கள் 27 ஆண்டுகளுக்கு முன் நடத்திய 'வானம் பாடி' என்னும் பாட்டிதழில், இப்படித்தான் பாவலர் ஒருவர் என் பாடலைத் தம் பெயரில் வெளியிட்டிருந்தார். பின்னர் அது கண்டு பிடிக்கப்பட்டு இதழில் எச்சரித்து அறிவிப்புச் செய்யப்பட்டது. அதன் பின் மறைந்த பேரா. திரு. இலக்குவனார் நடத்திய 'குறள் நெறி'யில், நான் பாவேந்தருக்காக எழுதிய ஒரு பாராட்டுப் பாடலை, அவருக்காக ஒருவர் தம் பெயருடன் வெளியிட்டிருந்தார். இதே போல், என் 'கொய்யாக்கனி' முதன் முதலாக வெளிவந்த பின், அக் கதையின் முகாமைக் கருத்தை ஒரு திரைப் படத்திலும் (சில பாடல் அடிகளுடன்) வெளியிட்டிருந்தார்கள். அதற்கு உரிமை வழக்குப் போடும் படி என் வழக்கறிஞ நண்பர் ஒருவர் கூட, அக்கால் வலுயுறுத்தியும் நான் தவிர்த்து விட்டேன்.)

இந்தப் பழைமை நிகழ்ச்சிகளை இதனுடு பொருத்தி நினைத்துப் பார்த்தேன். நடைமுறையில் இந்நிகழ்ச்சி அவற்றினின்று சிறிது வேறு பட்டதாகவும் வியப்பனதாகவும் போய் விட்டது; அவ்வளவே!

ஆனல் இவ்வளவு பெரிய புலவர் இவ்வாறு ஒரு சிறுமைச யால் பொய் பேசுவார் என்று என்னல் கருதிப் பார்க்கவும் முடியவில்லை. புலவரை அழைத்து வந்த காவல் அதிகாரியின் முகம் அதிர்ச்சியும், வியப்பும், அருவருப்பும், சினமும் தோன்றக் காட்சி யளித்தது. அவரும்,

'ஐயாவிடம் உண்மையைக் கூறி விடுங்கள்; இதை நீங்கள் எழுதியிருக்கவே முடியாது' என்று புலவரைக் கேட்டுக் கொண்டார். அவர் ஒப்புக் கொள்வார் என்று எனக்குப் படவில்லை. "எப்படி இப்படி வெளிப்படையாக ஒப்புக் கொள்வது" என்னும் ஓர் இக்கட்டான மனநிலை அவருக்கு இருந்திருக்கலாம். அமைதி யாக இருந்தார்.

அதன் பின், அச்சகத்திலிருந்த என் மகனை அழைத்து வரச் செய்து, அவர் பாடிய பாடல்கள் வெளிவந்த 'தென்மொழி இதழ் களை எடுத்துக் காட்டச் சொன்னேன். அவனும் சில நொடிகளில் அவ்விதழ்கள்' உள்ள தொகுப்பை எடுத்துக் கொண்டு வந்து காட்டினன். அவரையே அப்பாடல்களை ஒருமுறை உரக்கப் படிக்கு மாறு கூறினேன். அவரும் படித்து விட்டு வெட்கப் புன்னகை ஒன்றைச் சிந்தினர். மீண்டும் புலவரிடம் பேசினேன்.

# முத்து வீரியம்

— புலவர். தி. நா, அறிவுஒளி. க மு., கல்.இ.,

முன்னுரை : பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் உறையூர் முத்துவீரப்பர். முதுபெரும்புலவரும் பேராசிரியரும் இலக்கண நூலாசிரியருமாகத் திகழ்ந்தவர் இவர். இவர் அளித்த நன்கொடையே முத்துவீரியம் ஆகும்.

ஐந்திலக்கணங்களையும் உணர்த்தும் முத்துவீரியம் அருமையும் சிறப்பும் பெருமையும் அமைந்த திருநூலாகும்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

"இதோ பாருங்கள்! நான் உங்கள் மேல் சிறு வருத்தமோ, வெறுப்போ, சினமோ கொள்ள முடியவில்லை. வேறு எவரோ இந்தப் பாடல்களைத் தென்மொழியிலிருந்து எடுத்தவை என்று கூறாமல், உங்களிடம் படியெடுத்துக் கொடுத்திருக்க வேண்டும். நீங்கள் அவற்றை மனப் பாடம் செய்து அனைவரிடமும் பாடிக் காட்டியிருக்க வேண்டும். காலப் போக்கில் அவை உங்களாலேயே எழுதப் பட்டவை போன்ற உணர்வு உங்களுக்கு வந்து விட்டது. உங்கள் மேல் பிழையில்லை. குற்றமாகவும் நான் கருதவில்லை. உங்களிடம் உள்ள தமிழ்ப் புலமையும் தமிழ்ப்பற்றும், தமிழ் உணர்வும் அவ்வாறு கருதுவதற்கு என்னைத் தடுக்கின்றன. ஆனால் உண்மையை நீங்கள் சொல்லி விடுவது நல்லது. இவற்றை நீங்கள் எழுதியதாக இன்னுமா சொல்ல விரும்புகிறீர்கள்?" — மிகவும் அமைதியாகக் கேட்டேன்.

புலவர் மன நெகிழ்ச்சியோடு கூறினார் : "இல்லை ஐயா, என் கல்லூரி ஆசிரியர் எழுதிக் கொண்டு வந்து கொடுத்து, இவற்றை மனப்பாடம் செய்து கொள்ளும்படி சொன்னார். ஆனால் நானும் வேறு சில பாடல்களை எழுதியுள்ளேன், அவற்றை நான் பாடிக் காட்டட்டுமா?" என்று வெட்கத்தை வெற்றி கொண்டவராகக் கேட்டார்!

"வேண்டவே வேண்டாம். பொறுத்துக் கொள்ளுங்கள். அவற்றை இனியும் என் காதுகள் கேட்டு மகிழ்ச்சி அடைய இயலாது. இந்நிகழ்ச்சியை அடியோடு மறந்து விடுங்கள். இனி மேல் எந்த நிலையிலும் நீங்கள் உண்மையை மறைத்துப் பேச வேண்டாம்! இதனால் உங்களுக்குத்தான் மன வருத்தம்! நல்ல வேளை, நானாக இருந்து விட்டேன். வேறு எவராகிலும் 'தென்மொழி' அலுவலகத்தில் இவ்வாறு கூறியிருந்தால் என்ன நடந்திருக்குமென்று சொல்ல முடியாது. போய் வாருங்கள்" — என்று மிக்க அன்புடனும் பரிவுடனும் தாய்மை உணர்வுடனும் அவருக்கு வணக்கம் கூறி அனுப்பி வைத்தேன்!

இது நடந்திருக்கக் கூடாது! ஆனால் நடந்து விட்டது! என்ன செய்வது? காலம் அப்படி! 0

பெரும்புலவர் மீனாட்சி சுந்தரனாரின் 'அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ்' நூலுக்கு முத்துவீரப்பர் சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார்.

மறைமலையடிகளாரின் ஆசிரியர்களாக ஒளிர்ந்த சூளை சோமசுந்தர (நாயக)ர், நாகை நாராயண சாமியார், உறையூர் பிச்சை இபுராகிம்புலவர் மற்றும் அமிர்தகவி அமிர்தம்(பிள்ளை) ஆகியோர் உறையூர் முத்துவீரப்பரின் அறிவார்ந்த மாணக்கர் ஆவர்.

ஈடற்ற ஆற்றல் சான்ற பேரறிஞர் முத்து வீரப்பர் பற்றி இலக்கிய வரலாற்றாசிரியர் அறிஞர் கா.சு. அவர்கள் தம் இலக்கிய வரலாற்று இரண்டாம் பகுதியில், "முத்து வீரிய உபாத்தியாயர் 'முத்து வீரியமென்'னும் யாப்பு நூல் செய்தது எக்காலத்தென்று விளங்கவில்லை" (ப: 4 45) என எழுதியுள்ளார்.

அறிஞர் கா. சுப்பிரமணியர் முத்துவீரியத்தைக் கற்கவில்லையெனத் தெரிகிறது. ஐந்திலக்கணம் உரைக்கும் நூலை 'யாப்பு நூல்' என்கிறார்! ஆயினும் அறிஞர்: கா. சு. அவர்கள் தாமறிந்த செய்திகளை எத்துணை மெய்ம்மையுடன் எழுதியுள்ளார் என நாம் போற்ற வேண்டும்!

பர். ச. வே. சுப்பிரமணியனார் 'இலக்கணத் தொகை'யில் முத்து வீரியம் குறித்துப் பாராட்டி எழுதியுள்ளார்.*

தொல்காப்பியம் புணர்ச்சியிலக்கணம் உணர்த்தும் நெறி முறைகள் உயரிய அறிவியல் ஒட்ப நுட்பமுடையன; உண்மையியல் சார்ந்தன. இந்நுட்பத்தைப் பின்னுள் இலக்கணியர் அவ்வளவாக உணர்ந்தாரிலர் எனலாம். ஆயின், முத்து வீரியம் தொல்காப்பிய நெறியில் இயலும் தன்மை குறிப்பிடத்தக்கதாகும்.

நூலமைப்பு : ஐந்திலக்கணமும் உணர்த்தும் முத்துவீரியத்தில் 1288 நூற்பாக்கள் உள.

1. எழுத்ததிகாரம் : 457 நூற்பாக்கள்
2. சொல்லதிகாரம்: 311 ,,
3. பொருள்திகாரம்: 93 ,,
4. யாப்பதிகாரம் : 266 நூற்பாக்கள்
5. அணியதிகாரம் : 160

* 'பத்தொன்பதாம் நூற்றாண்டில் உறையூர் வித்துவான் முத்துவீர உபாத்தியாயர் முத்து வீரியத்தை எழுதினார். மேற்கண்ட நூல்களைப் போலன்றி (வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் முதலியன) இது பெரும்பாலும் தொல்காப்பியத்தையே அடியொற்றிச் சொல்கின்றது. அளபெடையை எட்டுவகையாக்கியது போன்ற புதுமைகள் மட்டுமே இந்நூலில் காணலாம். இலக்கணக் கலைச் சொற்களைக் கூறுமிடத்து நிகண்டின் முறையைப் பின்பற்றியுள்ளார். (ப:9)

*தமிழுக்கே சிறப்புரிமையுடைய பொருளிலக்கணத்தை முகச் சுருக்கமாக ஆய்ந்துரைக்கிறார் முத்துவீரியத்தார். இது அந்நாள் தமிழ்ப் புலவருலகப் போக்கு என எண்ணலாம்.

முத்துவீரியத்தில் முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றி மேற்கொள்ளப்பெற்றுள் ளது. தொல்காப்பிய நூற்பா நூறும், நன்னூல்நூற்பா ஐம்பதும் முன்னோர் மேற்கோளாக அப்படியே ஆளப்பெற்றுள்ளன.

முத்துவீரப்பர் தொல்காப்பியர், பவணந்தியார் ஆகிய இலக் கண ஆசிரியர்கள்பால் எவ்வளவு பேரன்பும் மதிப்பும் பேரீடு பாடும் உடையவர் என்பதை இதனுல் நன்கறியலாம்.

சமயப் பொதுமை: முத்துவீரப்பர் சிவநெறியினர் என்பர். ஆயின் இவரது கடவுள் வாழ்த்துப் பாக்கள் பொது நிலையினவாக விளங்குந்திறன் கருதற்குரியதாகும்.[1]

இலக்கியங் கண்டதற்கு இலக்கணம்: இவர் அகப்பொருள் துறைகள் வகுக்கும் நெறியில் திருச்சிற்றம்பலக் கோவையாரைப் பின்பற்றி நூற்பாக்கள் இயற்றியுள்ளார்,

நம்பியகப்பொருள் என்னும் இலக்கண நூலிற்கண்ட இலக்க ணத்திற்கு மேற்கோள் இலக்கியமாகத் தஞ்சைவாணன் கோவை நூலைப் பொய்யா மொழிப் புலவர் இயற்றினர்.

இறையனுர் களவியல் நூலுக்கு இலக்கியமாகப் 'பாண்டிக் கோவை' அமைந்துள்ளது.

'திருக்கோவையார்' இலக்கியத்திற்குத் தக இலக்கணம் வகுத்தது முத்து வீரியமாகும்.

முத்துவீரப்பர் 'எழுதப்படுதலின் எழுத்தா கும்மே '(மு. வீ: 1 எனத் தம் நூலைத் தொடங்குகிருர்!

எழுத்து என்றல் என்ன என்று விளக்காமலே பிறர் நூல் செய்திருக்க, முத்துவீரரே அறிவியல் நெறிப்படி இலக்கணம் இசைத்துள்ளார்.

---

1. 'எப்பொருள் வயின் உயிர் எதிர்ந்து மறைகுவது
அப்பொருள் அடிதொழுது அறைகுவன் எழுத்தே.'
(முத்து-எழுத்து')
'உருபமும் அருபமும் உருபரு பமுமுளன்
இலனெவன் அவன்தொழுது இயம்புவன் சொல்லே'
(முத்து-சொல்)
"மெய்ப்பொருள் பகாப்பொருள் வேத முதற்பொருள்
அப்பொருள் அகத்துஅணிந்து அறைகுவன் பொருளே"
(முத்து-பொருள்)
"எலாந்தா மாக இருக்கும் பொருள்எது
அதன்அடி மலர்தொழுது அறைகுவன்யாப்பே."
(முத்து-யாப்பு)
"சுத்தமெய்ஞ் ஞானச் சுடர்மணி விளக்கைச்
சித்தமது இருத்திச் செப்புவல் அணியே.)"
(முத்து-அணி)

"எழுத்தின் வடிவம் குறித்தும் முத்துவீரியம் கூறும். செவிப் புலனால் அறியும் ஓசை வடிவையும், கட்புலனால் அறியும் வரி வடிவையும் எழுத்து ஏற்கும்" என்கிறார் முத்துவீரர். [2]

இரேகை, வரி, பொறி என்னும் பெயர்களும் எழுத்து என்னும் பொருளை உணர்த்தும்; இவை ஒரு பொருட் கிளவிகள் என்பர். [3]

அச்சு, ஆவி, சுரம், பூதம் என்னுஞ் சொற்களுக்கு 'உயிர்' என்று பொருளாகும் என்பர் [4]

அளபெடைகள்? முத்துவீரர் அளபெடை எட்டுவகை என்பார் அவை: (1) இயற்கையளபெடை (2) செயற்கையளபெடை (3) இன்னிசையளபெடை (4) சொல்லிசையளபடை (5) நெடிலளபெடை (6) குறிலளபெடை (7) ஒற்றளபெடை (8) எழுத்துப் பேறு அளபெடை என்பவையாகும்.

'இசைகெடின் நெட்டெழுத் தெல்லாந் தமக்கு இனம்
ஆகிய குறிலொடும் அளவு எழும் எனலே' (முத்துவீரியம்; 31)

"அதுதான்"
இயற்கை செயற்கை யின்னிசை சொல்லிசை
நெடில் குறில் ஒற்றளபு எழுத்துப் பேறு அளபு
எண் வகைப்படும் என்மனர் புலவர்" (முத்துவீரியம்: 32)

அழைப்பதும், விலை கூறிக் கூவி விற்பதும், துன்பத்தில் புலம் புவதும் ஆகிய நிலைகளில் எழுத்துச் செயற்கையில்லாமல் பிறக்கும் அளபெடைகள் இயற்கையளபெடை யாகும்.

செய்யுளில் சீர்தளை கெட்டவிடத்தில் புலவன் கொள்ளுவது செயற்கையளபெடையாகும்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றுங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை" (குறள்).

குற்றுகரம் அளபெடுப்பது இன்னிசையளபெடை; ஐகாரக் குறுக்கம் அளபு எடுப்பது சொல்லிசையளபெடை; ஆஅ-நெடில ளபெடை: மணிஇ- குற்றெழுத்து நெட்டெழுத்தாகியளபெடுத்த குறிலளபெடை; சிந்ந்து - ஒற்றளபடை; நிலவினையரா அப் பற்றிற்று' —திரிபால் எழுந்தது எழுத்துப் பேறளபெடை எனக் கொள்ளும் ஒருசார் ஆசிரியர்கள் தமிழ்நாட்டில் இருந்தனர் என்பதை முத்துவீரியம் விளக்குகிறது. (தொடரும்)

---

2. "எழுத்தொலி வடிவரி வடிவையும் ஏற்கும்" (முத்துவீரியம்: 2)
3. "இரேகை வரிபொறி யெழுத்தின் பெயரே" ( „ 3)
4. "அச்சு ஆவி சுரம் பூதம் ஆம் உயிர் என்ப ( „ 4)

அடுத்து, தென்மொழியை நிறுத்தக்கூடாது; தொடர்ந்து வர வேண்டும் என்று கூறுவோர் பாவலரேறு அவர்களின் அடிமன உணர்வுகளை ஏன் புரிந்துகொள்ள மறுக்கின்றனர். 'தென்மொழி' யிருந்து 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்' கண்டதும், அதை வளர்ப்பதற்குத் 'தமிழ் நிலம்' தோற்றுவித்ததும் இன்று தமிழினத் திற்கு ஏற்பட்டுள்ள பல்முனைத் தாக்குதல்களையும் தடுப்பதற்கே யாகும். தென்மொழி நமக்கு இதுவரை பெரும்பாலும் கேடய மாகவே பயன்பட்டுவந்துள்ளது. எதிரி புதிய வலுவான கருவி களைக்கொண்டு பலமுனையிலும் தாக்கும்போது நாமும் வேறு வலிவான கருவிகளையே நாட வேண்டியுள்ளது. இன்று தமிழகத் தில் எங்கு நோக்கினும் பசி, பட்டினி, வறுமை, ஒழுக்கக்கேடுகள், இலங்கையில் தமிழினம் படுகொலை என்ற ஓலங்கள் ஒங்கிக்கேட் கின்றன. இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் கரணியம் என்ன வென்று யாரேனும் சிந்தித்தார்களா? தமிழினத்திற்கென்று தனி யான நில உரிமையும் அரசுரிமையும் இருந்தால் இக்கேடுகளை களை வதில் தடைகள் எங்கிருந்து வரும்? இவற்றையெல்லாம் எண்ணிச் சிறிது முன்னேக்கிச் செல்லும் அவருக்கு நாம் துணையாகச் செல்லா விடினும், தடையாக இருக்க வேண்டாம். அரசியல் சூழ்ச்சியா லும், பொருளியல் தாழ்ச்சியாலும், தமிழினம் அழிகின்றதே, பல் வேறு கூறுகளாகச் சிதைகின்றதே, பண்பாடு குலைகின்றதே' என்ற உள்ளார்ந்த துயரம் அவருடைய பேச்சுகளிலும் எழுத்துகளிலும் உள்ளீடாக இருப்பதைத் தென்மொழி அன்பர்கள் இன்னும் ஏன் உணரவில்லை? இனம் முற்றிலும் வேறு வேறு கூறுகப் பிரிந்தபிறகு அல்லது அழிந்தபிறகு மொழி யாருக்காக? இலக்கியம் யாருக்காக? தமிழினத்தைப் பொறுத்தவரை இலங்கையைத் தவிர வேறு இடங் களுக்குச் சென்றவர்களெல்லாம் வேற்று மொழிக்கும் மதத்திற்கும் அடிமைகளாகிக் கொண்டுவரும் சூழ்நிலை உருவாகிவிட்டது. இங் குள்ளோர்களும் கிறித்தவனுகவும் முசுலீமாகவும் மாறி வருகின்ற னர். இவ்வாறு முற்றிலும் வேறு இனத்தவனுகவும் மதத்தினனுக வும் மாறியபின் அல்லது அடிமையானபின், யாரைவைத்து அல்லது யாருக்காக நாம் தென்மொழியை வளர்ப்பது? தமிழ் நிலத்தை மீட்பது?

தமிழ் மொழி, இன, நாட்டு விடுதலையைக் கூறிக்கொண்டே தென்மொழி தொடங்கப்பெற்றது என்பதை முன்பே கண்டோம். ஆனால், தென்மொழியில் அன்றிருந்த உயிர்ப்பு எங்கே? தமிழினத் தின் தோற்றமும், அதன் வளர்ச்சியும் வீழ்ச்சியும், வீழ்ச்சிக்குரிய கரணியமும் மீட்புக்குரிய வழியையுங்கண்டு எதிரியை நோக்கியே இருவிழிமூடாமல் இருந்த அந்தப் பார்வை எங்கே? தூவல் முனை யாலே எங்கள் உணர்வு நரம்புகளைக் குத்திக் குடைந்த அன்றைய உரைகள் எங்கே? தங்களுடைய சோர்வு எங்களையும் அல்லவோ பற்றிக் கொள்ளும். இன்று எல்லோரும் சேர்ந்து ஓலமும் ஒப்பாரி யும் வைப்பதற்கா தென்மொழி பயன்படுவது? ஆகவே பாவலரேறு அவர்கள் எந்நிலையிலும் தங்கள் சோர்ந்த உள்ளத்தை வெளிப் படையாக காட்டவேண்டாமென்று இறைஞ்சுகிறேன். ஏனெ னில், தந்தை பெரியாருக்குப்பின், ஏன் அவரினும் மேலாக 'தமிழக விடுதலை' என்னும் அணையா ஈவிளக்கு அணைந்து விடாம லிருக்க அவர் ஒருவரே தொடர்ந்து தூண்டிக்கொண்டு வருகின் றார்கள். அவர்களும் சோர்வுபட்டால் இன்னும் எத்தனை ஊழிக் காலத்திற்குத் தமிழினம் அடிமைப்பட்டிருப்பது?

இறுதியாக, தமிழினத்தின் இன்றைய காலகட்டத்தை நாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். அதிகார வெறி பிடித்த இந்திராகாந்தி அவர்கள் தமிழினப்பற்றுச் சிறிதுமில்லாது மா. கோ. இரா அவர்களைப் பயன்படுத்தித் தமிழினத்தை அடிமைப்

படுத்த முயல்கின்றார். இதற்கு இங்குள்ள தேசியப் புரட்டர்களும் துணைபோகின்றனர். மேலும், இன்று எவ்வகைக் கொள்கையு மின்றி நாளும் ஒரு புதிய கட்சி தோன்றிக் கொண்டே உள்ளது. தி.மு.கவும், அ.தி.மு.கவும் ஒன்றையொன்று அழிப்பதிலேயே அல்லது அழிப்பதற்கு இந்திரா பேராயத்திற்குத் துணை போவதி லேயே தங்களது அரசியலை நடத்திக்கொண்டு, தாங்களும் அழிந்து பொது மக்களையும் அழித்துக் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், பாவலரேறு அவர்கள் விரைந்தும் துணிந்தும் முடிவு செய்யவேண்டும். படித்தவர்களும் பணம் படைத்தவர் களும் தங்களுக்கு மேலே உள்ளவர்களுடன் சேர்வதற்குக் கீழே உள்ளவர்களைச் சுரண்டுவார்கள் அல்லது மிதிப்பார்களே தவிர, அவர்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள். இதற்கு நெறி விலக்காக ஒரு சிலர் மட்டுமே இருப்பர்: அவர்களுக்காக நாம் தென்மொழியை நடத்திக் கொண்டிருக்க முடியாது. இன்று சிற்றூர்ப் புறங்களில் உள்ள வறுமை நிலையை எழுத்தில் எழுத முடியாது. நகரங்களின் பகட்டு வெளிச்சத்தில் மேலும் நாம் மயங்கிக்கொண்டிருக்க முடியாது. மேலும் தமிழினத்தின விடிவை நோக்கிச் செயல்படும் நமக்குத் தென்மொழி வெளிவருவதின் கால இடைவெளி, எண்ணத் தொடர்பு, செயல் தொடர்பு அற்றதாக ஆக்கி விடுகிறது: ஆகவே, பாவலரேறு அவர்கள் முன்பே எடுத்த முடிவுப்படி உ.த.மு.க.வை வளர்ப்பதற்கு 'தமிழ் நிலத்தை' வலுப் படுத்தித்,தமிழின விடுதலைக்குத் தலைமை ஏற்க வேண்டுகிறேன்.

— த. கண்ணன் துவரங்குறிச்சி.

*0: 980;* தமிழ்க்கடல் தென்மொழி திருமிகு ஐயா பாவலரேறு அவர்களுக்கு! தென்மொழியை நிறுத்தலாம், தவறில்லை; தங்கள் முடிவு சரியே! ஆனல் எங்கள் தமிழ் நெஞ்சங்களின் முடிவு அது வன்று. திங்கள் இதழாக வரும் தென்மொழியைக் காலாண்டு இதழாக மாற்றித்,தென்மொழிஇதழுக்குரிய கட்டணங்களை மாற்று மல் எப்பொழுதும்போல் தென்மொழி உலவி வரட்டும். அதனல் மகிழட்டும் தமிழ் நெஞ்சங்கள். இதனல் ஒரு பக்கம் வாட்டம் இருந்தாலும் மறுபக்கம் மகிழ்ச்சி ஏற்படும்.

தென்மொழியை நிறுத்தலாம். தவறில்லை; தங்கள் முடிவு சரியே! ஆனல் தனித் தமிழ் நெஞ்சங்களுக்கு ஏதோ திங்கள் ஒரு முறை வந்து தமிழ் நெஞ்சங்களில் கூத்தாடி குழவி மகிழும் தனித் தமிழ்க் குழந்தையைப் பிரிந்தால் அந்த நெஞ்சம் தாங்குமா அய்யா! இது நீங்கள் பெற்ற குழந்தைதான். ஆனல் நீங்கள் இ'து எல்லோருக்கும் பொது என்று ஆக்கிவிட்டபிறகு குழந்தையைப் பிரிக்க வேண்டாம். இது வளரட்டும். கால் ஆண்டுக் கொருமுறை வெளியில் வந்து உலவட்டும்! பரவட்டும் தனித் தமிழ்! உதவட்டும் உலகத் தமிழ் இன முன்னேற்றக் கழகத்திற்கு! உங்கள் அன்புள்ள

-இரா. இராமச்சந்திரன் மன்னங்காடு, பட்டுக்கோட்டை

*0: 981* நலஞ்சார்ந்த ஐயா! 27-6-83-இல் அமரர்பூண்டி பழநி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டது பற்றி மிக்க நன்றி!

பழநியில் அன்பு, அறிவு, மெய்ப்பொருள், பகுத்தறிவு, இன நலம், பொதுமை, தமிழாய்வு, சித்த மருத்துவம் ஆகிய பலதுறைப் பட்ட தமிழ் மழை பொழிந்து எங்களின் உள்ளம் நனைய உரை யாற்றினீர்கள்! அரசர்கள் ஆண்ட ஊராம் அமரர்பூண்டியில் இன்னும் சில வரலாற்று எச்சங்களும் உண்டு "மிகச் சிறந்த

[தொடர்ச்சி 25-ஆம் பக்கம் பார்க்க]